Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JULY 08 2025

செவ்வாய்க்கிழமை 08, ஜூலை 2025 | ஒளி: 10 கதிர் 278 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



## மருந்துகளை வாங்குவது இலவச சுகாதாரமா?

நமது நாட்டிற்குக் கிடைத்த மிக உன்னத பரிசான இலவச சுகாதார சேவை, வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் இலவசமான ஒன்றாகவே அமைந்து காணப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நமது நாட்டின் நலன்புரி அரசின் முக்கி அங்கமான சுகாதாரக் கட்டமைப்பில் பெரும் சரிவும் வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2




### அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்புகளுக்கு

# பிரிக்ஸ் கண்டனம்

### ட்ரம்ப் பெயர் தவிர்ப்பு

அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்புகள் பெரும் கவலைகளை ஏற்படுத்தி இருப்பதாகவும், பொருளாதார ரீதியில் நிச்சயமற்ற தன்மையை உருவாக்குவதாகவும் பிரிக்ஸ் நாடுகளின் கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது. எனினும், இந்த விவகாரத்தில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் பெயர் குறிப்பிடாமல் தவிர்க்கப்பட்டது கவனிக்கத்தக்கது.

இது குறித்து பிரிக்ஸ் நாடுகளின் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிவிப்பில், அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்புகள் குறித்து மறைமுகமாக விமர்சிக்கப்பட்டுள்ளது.

வரி உயர்வு தீவிர கவலைகளை அளிப்பதாகவும், அவை உலக வர்த்தக அமைப்பின் விதிகளுக்கு முரணாக இருப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. உலக அளவில் வர்த்தகம் குறையவும், விநியோகச் சங்கிலிகள் சீர்குலையவும், நிச்சயமற்ற தன்மை ஏற்படவும் இவை வழிவகுக்கும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2035 வரை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 5%-ஐ ராணுவ செலவினங்களுக்கு கூடுதலாகச் செலவிடுவது என்ற நேட்டோ நாடுகளின் முடிவை பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா கடுமையாக விமர்சித்தார்.

தொடர்ச்சி P2




## தேங்காய் விலை குறைகிறது

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

உள்ளூர் சந்தையில் தேங்காய் விலை வேகமாக சரிந்து வருவதாலும், தேங்காய் விற்பனை அதிகரிப்பதாலும் தங்கள் வருமானமும் அதிகரித்துள்ளதாக ஹட்டன் நகர தேங்காய் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2

### வைத்தியர் மகேஷியின்

## மகளுக்கும் விளக்கமறியல்



தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் வைத்தியர் மகேஷி விஜேரத்னவின் மகள், ஜூலை 09ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டள்ளார்.

தொடர்ச்சி P2

## இலங்கைக்கு IMF 1.74 பில்லியன் டொலரை வழங்கியுள்ளது



இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் இதுவரை 1.74 பில்லியன் அமெரிக்கன் டொலர்களை வழங்கியுள்ளதாக அரச நிதிக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கபில சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## குளத்தில் மூழ்கி 3 சிறுவர்கள் மரணம்

■ எஸ்.எம்.எம்.முர்ஷித்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை கருவப்பன்சேனை குளத்தில் மூன்று சிறுவர்கள் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

உறவினர்களுடன் ஞாயிற்றுக்கிழமை(06) மாலை சென்றவேளை இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இதில் பனிச்சங்கேணியைச் சேர்ந்த க.சானுஜன் வயது (12) க.டிக்‌ஷன் வயது (10),ஜெ.ருக்‌ஷானா வயது (10) ஆகிய மூன்று சிறுவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## கதிர்வேலாயுத சுவாமி ஆலய கும்பாபிஷேகத்தில் சஜித்...

இருநூறு ஆண்டுகளுக்கு மேலான வரலாறுடைய கொழும்பு புறக்கோட்டை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் மகா கும்பாபிஷேக நிகழ்வு திங்கட்கிழமை (07) அன்று இடம்பெற்றது.
ஆலய அறங்காவலர்களின் அழைப்பை ஏற்று இலங்கை பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பங்கேற்று ஆசி பெற்றார்.
அவருடன் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

### சபாநாயகர் மீதான குற்றச்சாட்டுகள்:

## செயலாளர் நாயகம் பதில்



சபாநாயகர் மற்றும் அவரின் தனிப்பட்ட பணியாட்தொதிக்குப் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள வசதிகள் தொடர்பில் ஊடகங்களில் வெளியான வெவ்வேறு செய்திகள் தொடர்பான ஊடக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### ஜகத் விதான எம்.பி.

## சம்பளப் பட்டியலை பகிரங்கப்படுத்தினார்



எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதான தனது சம்பளப் பட்டியலை பேஸ்புக்கில் வெளியிட்டுள்ளார். இதன் மூலம் அவ்வாறு செய்த ஒரே பாராளுமன்ற உறுப்பினர் ஆனார்.

அதன்படி, இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பெறும் அனைத்து சலுகைகளையும் அவர் வெளியிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



### கோடீஸ்வர தொழிலதிபர் கொலை:

## மாணவனும் கைது

கட்டுனேரியில் ஒரு கோடீஸ்வர தொழிலதிபரைக் கொலை செய்து, சிரிகம்பள பகுதியில் உள்ள கார் கழுவும் இடத்தில் உள்ள கழிவுநீர் தாங்கிக்குள் அவரது உடலை வீசிய குற்றச்சாட்டில் இரண்டு சகோதரர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட 19 வயதான சகோதரர், வாகன பழுதுபார்க்கும் நபராவார். அதே நேரத்தில், அவரது 15 வயது தம்பி மாரவிலாவில் உள்ள ஒரு பிரபலமான பாடசாலையில் படித்து வருகிறார்.

தொடர்ச்சி P2

### தேர்தல் ஆணைக்குழுவின்

## சேவைகள் தற்காலிக இடைநிறுத்தம்

தேர்தல் ஆணைக்குழுவின் சேவைகள் திங்கட்கிழமை (07) முதல் மறு அறிவிப்பு வரும் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

அத்தியாவசிய பராமரிப்பு பணிகள் காரணமாக இந்த இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக, வாக்காளர் பதிவு விவரங்களைச் சரிபார்த்தல், ஒன்லைன் வாக்காளர் பதிவு, வாக்காளர் அறிக்கைகளைப் பெறுதல் மற்றும் பிற மாவட்டங்களுடன் தொடர்புடைய விலைப்புள்ளிகளைக் கோருதல் உள்ளிட்ட அனைத்து மின் சேவைகளும் மறு அறிவிப்பு வரும் வரை கிடைக்காது என்று ஆணைக்குழு மேலும் கூறியுள்ளது.






### சுண்டிக்குளத்தில்

## காணிகளை இரகசியமாக அளவீடு செய்த கடற்படை

யாழ். வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் J/435 கிராம சேவகர் பிரிவில் மக்களின் காணிகள் இரகசியமான முறையில் கடற்படையால் அளவீடு செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண காணிக்கான மக்கள் உரிமை இயக்கத்தின் தலைவர் இ.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# மருந்துகளை வாங்குவது இலவச சுகாதாரமா?

தேசிய வைத்தியசாலையில் காணப்படும் 4 MRI ஸ்கேனர்களில் 3 ஸ்கேன் இயந்திரங்கள் செயலிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது என்றார்.

பிலியந்தலை மாகந்தன சங்கல்ப விகாரையில் ஞாயிற்றுக்கிழமை (06) அன்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், இருதய நோயாளிகள் வைத்தியசாலைகளில் பெரும் சேவைகளுக்கு மேலதிக மருந்துகள் மற்றும் பிற பொருட்களைப் பெறுவதற்கு ஒரு இலட்சம் ரூபாவிற்கும் மேல் மேலதிகமாக செலவிட வேண்டியுள்ளது. நுண்ணுயிர் எதிர்ப்பிகள், மயக்க மருந்துகள் மற்றும் வலி நிவாரணிகளுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றன. தனியார் மருந்தகங்களில் கூட, இந்த மருந்துகளுக்கான தட்டுப்பாடு அதிகரித்து வருகின்றன.

நோய்வாய்ப்பட்ட நோயாளிகளுக்கு சரியான நேரத்தில் சேவைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். இலவச சுகாதாரம் என்பது அரச வைத்தியசாலையில் இருந்து மருந்துச் சீட்டைப் பெற்று தனியார் மருந்தகத்தில் மருந்து வாங்கும் நடவடிக்கையல்ல. எனவே, இந்த இலவச சுகாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும்.

இளைஞர்கள் மற்றும் நடுத்தர வயதினரிடையே இறப்பு விகித எண்ணிக்கை அண்மையில் 25% ஆக அதிகரித்துள்ளது.

தொற்றா நோய்கள் தான் இதற்கு காரணம் என்பதால், ஆரோக்கியமான சமுதாய வாழ்க்கை முறைகளை நோக்கி எமது வாழ்வை நாம் ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும். தற்சமயம் மூளைசாலிகள் வெளியேற்றம் மீண்டும் அதிகரித்து காணப்படுகின்றது.

படித்தவர்களும் புத்திஜீவிகளும் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். கொலைக் கலாச்சாரம் நாட்டை ஆக்கிரமித்துள்ளது. அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகளின் பிடியில் சிக்கித் தவிக்குமொரு சமூகம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலைக் கலாசாரம் அதிகரித்து வரும் நிலையில், இந்தக் கொடூரமான கொலைகாரர்கள், பாதாள உலகக் கும்பல்கள் மற்றும் போதைப்பொருள் கும்பல்களை கட்டுப்படுத்துவதற்கும், மக்கள் வாழும் சூழலை உருவாக்குவதற்கும் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். இதன் ஊடாக பொது மக்கள் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். இதற்குத் தேவையான வலுவானதொரு சட்டம் மற்றும் பாதுகாப்புக் கட்டமைப்பை நிறுவுவது சகல அரச மற்றும் அரச சாரா சிவில் சமூகத்தினது பொறுப்பாகும் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

# மாணவனும்...

கோடீஸ்வர தொழிலதிபரின் கொலையில் முக்கிய சந்தேக நபராகக் கருதப்படும் 20 வயது இளைஞரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பாடசாலை மாணவனும் அவரது சகோதரரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

புத்தளம் - மாரவில பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய வர்த்தகர் ஒருவர் ஜூன் மாதம் 30 ஆம் திகதியிலிருந்து காணாமல்போயுள்ளதாக வென்னப்புவை பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், காணாமல்போன வர்த்தகரின் கார் வென்னப்புவை பிரதேசத்தில் உள்ள அவரது 20 வயதுடைய நண்பனின் வீட்டிலிருந்து கடந்த வியாழக்கிழமை (03) கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கைதுசெய்யப்பட்ட வர்த்தகரின் நண்பனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி இரவு வர்த்தகரும் அவரது 5 நண்பர்களும் மதுபானம் அருந்திக்கொண்டிருந்த போது வர்த்தகருக்கும் நண்பர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தகராற்றில் வர்த்தகர் கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

பின்னர் நண்பர்கள் அனைவரும் இணைந்து வர்த்தகரின் சடலத்தை வென்னப்புவை, சிறிகம்பொல பிரதேசத்தில் உள்ள வாகனங்களைப் பழுதுபார்க்கும் நிலையம் ஒன்றின் கழிவு நீர் குழிக்குள் வீசியதாக வர்த்தகரின் நண்பன் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

# பிரிக்ஸ் கண்டனம்

சமாதானத்துக்காக செலவிடுவதைவிடப் போருக்காக செலவிடுவது எப்போதுமே எளிதானது என்று அவர் விமர்சித்தார்.

ஈரான் மீதான தாக்குதல்களுக்கு பிரிக்ஸ் நாடுகளின் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. எனினும், அந்த தீர்மானத்தில் இஸ்ரேல் பெயரோ, அமெரிக்காவின் பெயரோ இடம்பெறவில்லை. காசாவில் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தீவிர கவலையை ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிவித்துள்ள பிரிக்ஸ் நாடுகள், பிணைக் கைதிகள் அனைவரையும் ஹமாஸ் விடுவிக்க வேண்டும் என்றும், பேச்சுவார்த்தைக்கு இஸ்ரேல் திரும்ப வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், இஸ்ரேல், பாலஸ்தீனம் ஆகிய இரு நாடுகளையும் அங்கீகரிப்பதே பிரச்சினைக்குத் தீர்வு என்றும் பிரிக்ஸ் யோசனை தெரிவித்துள்ளது. உக்ரைன் - ரஷ்யா போர் தொடர்பான தீர்மானத்தில், ரஷ்யா மீது உக்ரைன் நடத்திய சமீபத்திய தாக்குதல்களுக்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

பிரிக்ஸ் கூட்டமைப்பு 2009-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா, எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், ஐக்கிய அரபு அமீரகம், இந்தோனேசியா ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. பிரிக்ஸ் கூட்டமைப்பின் 2 நாள் உச்சி மாநாடு பிரேசிலின் ரியோ டிஜெனிரோ நகரில் ஞாயிற்றுக்கிழமை (06) தொடங்கியது. இதில் பங்கேற்பதற்காக அங்கு சென்றுள்ள பிரதமர் மோடிக்கு, ரியோ டி ஜெனிரோ விமான நிலையத்தில் ஏராளமான இந்தியர்கள் திரண்டு, உற்சாக வரவேற்பு அளித்தனர்.

உச்சி மாநாட்டின் முதல் நாளான ஞாயிற்றுக்கிழமை (06) 'சர்வதேச அமைதி, பாதுகாப்பு, சீர்திருத்தம், நிர்வாகம்' குறித்த சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. மாநாட்டின் 2ஆம் நாளான திங்கட்கிழமை (07) சர்வதேச சுற்றுச்சூழல், சுகாதாரம் குறித்த சிறப்பு கூட்டம் நடைபெற்றது.. இந்த மாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி விளாதிமிர் புட்டின் கலந்து கொள்ளவில்லை. மாறாக, அவர் காணொலி காட்சி வாயிலாக மாநாட்டில் உரை நிகழ்த்தினார்.

அதேபோல், இந்த மாநாட்டில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் பங்கேற்கவில்லை. அவருக்குப் பதிலாக, சீன பிரதமர் லி கியாங் பங்கேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகின் பல்வேறு நாடுகள், குறிப்பாக பிரிக்ஸ் நாடுகள் மீது அமெரிக்க அரசு அதிக வரிகளை விதித்துள்ளது. இதுபற்றி பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

# செயலாளர் நாயகம் பதில்

பாராளுமன்றத்தின் சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்தனவுகும், அவருடைய தனிப்பட்ட பணியாட்தொகுதியினருக்கும் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள வசதிகள் குறித்து ஊடகங்களில் வெளியான வெவ்வேறு செய்திகள் தொடர்பில் பாராளுமன்ற செயலகம் கீழ்வரும் விடயங்களை வலியுறுத்துகின்றது.

இதுவரை காணப்பட்டுவந்த எல்லையற்ற எரிபொருள் வசதிக்குப் பதிலாக தற்போதைய சபாநாயகரின் முன்மொழிவுக்கு அமைய, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவருக்கு வழங்கப்படும் எரிபொருள் வசதிக்கு சமமான அளவை சபாநாயகருக்கும் பெற்றுக்கொடுப்பதற்கு 2025 மே 02ஆம் திகதி, சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற பணியாட்தொகுதி ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கு அமைய தற்போதைய சபாநாயகருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவருக்கு வழங்கப்படும் எரிபொருள் வசதிக்கு சமமான அளவான மாதமொன்றுக்கு 900 லீட்டர் வரை குறைக்கப்பட்டிருப்பதாக பாராளுமன்ற செயலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், ஜனாதிபதி செயலாளரினால் வெளியிடப்பட்ட PS/CSA/00/1/4/12 இலக்கத்தைக் கொண்ட 2025.01.21ஆம் திகதிய சுற்றுநிருபத்திற்கு அமைய சபாநாயகருக்குரிய உத்தியோகபூர்வ வாகனங்கள் இரண்டு (வாகன இலக்கம் CAN 8753/CBI 5198) அவரால் பயன்படுத்தப்படுவதுடன், சபாநாயகரின் ஊடகப் பிரிவின் பயன்பாட்டிற்காக NC 4923 என்ற இலக்கத்தைக் கொண்ட வான் வழங்கப்பட்டுள்ளது. சபாநாயகரின் தனிப்பட்ட பணியாட் தொகுதிக்காக இணைக்கப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை 08 என்பதுடன், சபாநாயகரின் தனிப்பட்ட செயலாளர், இணைப்புச் செயலாளர், ஊடகச் செயலாளர் மற்றும் பொதுமக்கள் தொடர்பாடல் அதிகாரி ஆகிய பதவிகளுக்கு சம்பந்தப்பட்ட அரசாங்க சுற்றறிக்கைகளின் விதிகளின் படி உத்தியோகபூர்வ வாகனங்கள் மற்றும் எரிபொருள் வசதிகள் உரித்தாகின்றன.

மேலும், பாராளுமன்றத்தினால் வழங்கப்படும் உணவுக்காக பாராளுமன்றத்தின் ஏனைய நிறைவேற்று அதிகாரிகளுக்கு சமமாக சபாநாயகரின் தனிப்பட்ட செயலாளரின் மாதாந்த சம்பளத்தில் உணவுக்காக நியமிக்கப்பட்ட தொகை அறவிடப்படுவதாகவும் பாராளுமன்ற செயலகம் குறிப்பிட்டுள்ளது.

சபாநாயகருக்கான உத்தியோகபூர்வ இல்லம் அவரின் தனிப்பட்ட நோக்கத்திற்காகவோ அல்லது கூட்டங்களுக்காகவோ அல்லது வேறு எந்தத் தேவைகளுக்கோ பயன்படுத்தப்படுவதில்லை என்பதுடன், சபாநாயகரின் உத்தியோகபூர்வ சந்திப்புக்கள் மற்றும் இராஜதந்திர மட்டத்திலான சந்திப்புக்கள் யாவும் பாராளுமன்றத்தில் உள்ள சபாநாயகரின் அலுவலகத்தில் இடம்பெறுகின்றது.

அத்துடன், சபாநாயகர் தற்பொழுது தற்காலிகமாக வசித்துவரும் கொழும்பு 04, லொரிஸ் ஒழுங்கையில் உள்ள வீட்டுக்கான மாதாந்த வாடகை 2007.04.20ஆம் திகதிய 22/2006ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றிநிருபத்திற்கு அமைய அவரின் சம்பளத்திலிருந்து மாதாந்தம் செலுத்தப்படுவதாகவும் பாராளுமன்ற செயலகம் தெரிவித்துள்ளது.

# காணிகளை இரகசியமாக அளவீடு செய்த கடற்படை

தனது இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை (06) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு சுண்டிக் குளம் பகுதியான J/ 435கிராம சேவகர் பிரிவில் அமைந்திருக்கின்ற மக்களின் மீன்பிடி நிலங்கள்,மக்களுக்குரிய காணிகள் திருகோணமலையில் இருந்து வந்த கடற்படையின் ஒரு குழுவால் மிக ரகசியமாக அளவீடு செய்யப்பட்டுள்ளது.

தங்களுடைய சொந்த காணிகள் கடற் படையினரால் அளவீடு செய்யப்படுவதை அறிந்த அங்கு இருந்த ஒரு சில மக்கள் கடற்படை இடம் கேள்வி எழுப்பிய போது உங்களுடைய காணி என்றால் அனுமதி பத்திரத்தை காட்டுமாறு தெரிவித்ததாக மக்கள் கூறுகின்றனர்.

சுண்டிக்குள பகுதியில் காணப்படும் அதிகளவான காணிகள் அரசகாணிகளாக காணப்படுகிறது, அங்கே வசித்த மக்களின் காணிகளுக்கு உறுதி இருக்காது மக்கள் காலா காலம் அந்த காணியில் வாழ்ந்து வந்தார்கள்.ஆனால் அவர்கள் வாழ்ந்த காணியை தற்பொழுது சுவிகரிப்பதற்காக கடற்படை முயற்சிக்கின்றது

அந்த பகுதியில் மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்ததற்கான சான்றுகள் இருக்கின்றன வீடுகள்,கிணறுகள், அங்கே மக்களால் பராமரிக்கப்பட்ட மரங்களும் இருக்கின்றன

இது தொடர்பாக அப்பகுதி கிராம அலுவலருக்கோ, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளருக்கோ தெரியப்படுத்தபடவில்லை ஒரு பிரதேசத்தில் ஒரு காணியை அளவீடு செய்ய வேண்டும் என்று சொன்னால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்த வேண்டும் மீனவ சங்கம், பிரதேச செயலாளர், கிராம அலுவலர், காணிக் கிளையினர் ஆகிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தாமல் மிக இரகசியமாக இந்த காணிகளை அளவீடு செய்துள்ளார்கள்

காலப்போக்கில் இந்த பகுதியில் கடல் தொழில் செய்கின்ற மக்கள் கடல் தொழில் செய்ய முடியாத நிலைமை உருவாகப் போகிறது. சுண்டிக்குளம் பகுதியில் கடற் படையின் தளங்கள் விஸ்தரிக்கப்பட போகிறது.

மக்களுடைய காணிகள் மக்களுக்கு விடுவிக்கப்பட வேண்டும் இல்லை என்று சொன்னால் மக்களை ஒருங்கிணைத்து இந்த காணிகளை விடுவிப்பதற்கான போராட்டங்களை செய்யப் போவதாக வடமாகாண காணிக்கான மக்கள் உரிமை இயக்கத்தின் தலைவர் இ.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

# குளத்தில் மூழ்கி 3 சிறுவர்கள் மரணம்

இவர்கள் மூவரும் பணிச்சங்கேணி திருமகள் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களாவார்.

குளத்தின் கரையோரத்தில் குழி தோண்டி விளையாடிக் கொண்டிருந்தபோது குளத்தில் காணப்பட்ட பாரிய குழியில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது கோடைக் காலமானதால் குளத்தில் நீர் மட்டம் குறைந்து காணப்படுவது வழக்கமாகும்.

இக்காலங்களில் குளத்தில் மீன் பிடித் தொழில் ஈடுபடுபவர்கள் சிலர் தங்களது குடும்ப சகிதம் அப் பகுதிக்குச் சென்று தங்கி நின்று இரவு பகலாக மீன் பிடித் தொழில் ஈடுபட்டு வருவது வழக்கமாகும்.

இந்த மரணம் தொடர்பாக வாகரை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தேங்காய் விலை குறைகிறது

கடந்த சில மாதங்களாக, ஒரு தேங்காய் ரூ.220க்கு விற்கப்பட்டது, தற்போது, ரூ.100 முதல் ரூ.170 வரை பல்வேறு விலைகளில் தேங்காய்கள் விற்கப்படுகின்றன.

ஹட்டன் நகரத்தில் உள்ள சில வியாபாரிகள், அதிக லாபத்துடன் தேங்காய்களை விற்பனை செய்வதாகவும், அப்போது தேங்காய் விற்பனை குறைந்ததால் தங்கள் வருமானமும் குறைந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

வரும் மாதங்களில் தேங்காய்களின் விலை மேலும் குறையும் என்றும், தற்போது சந்தையில் தேவையை விட தேங்காய் உற்பத்தி அதிகமாக இருப்பதாகவும் வியாபாரிகள் குறிப்பிட்டனர்.

# மகளுக்கும் விளக்கமறியல்

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் (CIABOC) அதிகாரிகளை அச்சுறுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டிலேயே கைது செய்யப்பட்டு, கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்கவின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சிறப்பு நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணரின் 21 வயது மகள், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகளுக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகக் கூறப்படும் செய்திகள் கடந்த வாரம் வெளிவந்தன. அந்த வகையில், சிறப்பு நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணரின் மகளை ஆணைக்குழு அதிகாரிகள் கைது செய்தனர்.

வைத்தியர் மகேஷி விஜேரத்ன, தான் இணைந்த தனியார் நிறுவனம் மூலம் நோயாளிகளுக்கு ரூ.50,000 மதிப்புள்ள மருத்துவ உபகரணங்களை ரூ.175,000க்கு விற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதனால் நோயாளிகளுக்கு ரூ.300 மில்லியனுக்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டதாகக் குற்றம் சாட்டிய இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

மருத்துவர் அதிகாரப்பூர்வ மருத்துவமனை நடைமுறைகள் மூலம் அறுவை சிகிச்சை பொருட்களை வாங்காமல் பொது சேவை கொள்முதல் விதிகளை மீறியதாகக் கூறியது.

அதற்கு பதிலாக அந்தப் பொருட்கள் அவரது தனியார் நிறுவனம் மூலம் சுமார் 300 நோயாளிகளுக்கு விற்கப்பட்டன.

பல நாட்களாக மூளைச் சாவு அடைந்ததாக அறிவிக்கப்பட்ட நோயாளிகளுக்கு மகேஷி விஜேரத்ன அறுவை சிகிச்சை செய்துள்ளார் என்பதும் சமீபத்தில் தெரியவந்தது.

குறித்த வைத்தியரும் அவரின் மருத்துவ மோசடிக்கு உதவிய அவரது இரண்டு கூட்டாளிகளும் தற்போது தடுப்புக் காவலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு IMF 1.74 பில்லியன் டொலரை வழங்கியுள்ளது

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதிகள் தொடர்பான தற்போதைய நிலைமையை தெளிவுபடுத்தும் வகையில் தகவல் திணைக்களத்தில் ஞாயிற்றுக்கிழமை (06) அன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை கோரிய கடன் தொகை 9 தவணைகளில் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

அவற்றில் 5 தவணைகள் ஏற்கெனவே பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஜூலை 3ஆம் திகதி 5ஆவது தவணையாக 350 மில்லியன் அமெரிக்கன் டொலர்களை இலங்கை பெற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சம்பளப் பட்டியலை பகிரங்கப்படுத்தினார்

ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் மாதாந்த கொடுப்பனவு ரூ.54,285, பொழுதுபோக்கு கொடுப்பனவு ரூ.1,000, தொலைபேசி கொடுப்பனவு ரூ. 50,000, அமர்வு கொடுப்பனவு ரூ.5,000, அலுவலக கொடுப்பனவு ரூ.100,000, எரிபொருள் கொடுப்பனவு ரூ.97,428.92 மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு ரூ.15,000.

அவரது நிகர சம்பளம் ரூ.317,760. 39. சம்பளப் பட்டியலின்படி, மாதாந்த கழிக்கவேண்டிய கட்டணங்களில் உணவு கட்டணமாக ரூ.1,200, தனிநபர் வருமான வரியாக ரூ.3,728.53 ஆகியவை அடங்கும், மேலும் ரூ.25 முத்திரைக் கட்டணமாக கழிக்கப்படுகிறது.

தனது முழு சம்பளத்தையும் சமூகப் பணிகளுக்காகப் பயன்படுத்துவதால் சம்பளப் பட்டியலை வெளியிட முடிவு செய்ததாக ஜகத் விதான எம்.பி. கூறியுள்ளார்.

“முன்பு நான் சம்பளத்தை ஏற்க வேண்டாம் என்று முடிவு செய்தேன். இருப்பினும், பின்னர் நான் சம்பளத்தைப் பெற்று, அதை முழுவதுமாக சமூக சேவைப் பணிகளுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று முடிவு செய்தேன். உண்மையில், எனது சம்பளத்தில் இரு மடங்கு தொகையை சமூகப் பணிகளுக்காகச் செலவிட்டேன்.

எனது தொகுதியில் உள்ளவர்களுக்கு நான் என்ன செய்கிறேன் என்பது தெரியும்” என்றும் அவர் கூறினார்.

“நான் ஒரு தொழிலதிபர் என்பதால் எனக்கு சம்பளம் தேவையில்லை,” என்று அவர் மேலும் கூறினார்.

முதலாவது முஸ்லிம் பெண்

# பெருமையை பெற்றார் பாத்திமா ஹஸ்னா

■ ஏ.எச்.ஏ.ஹுஸைன்



அஞ்சல் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு உதவி அத்தியட்சகராக கே.பாத்திமா ஹஸ்னா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தின் மூலம் இலங்கை அஞ்சல் திணைக்களத்தில் இலங்கையின் முதலாவது முஸ்லிம் பெண் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

இலங்கையின் அஞ்சல் திணைக்கள வரலாற்றில் இதற்கு முன்னர் இந்தப் பதவிக்கு முஸ்லிம் பெண் ஒருவர் நியமனம் பெற்றிருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு ஏறாவூரைச் சேர்ந்த பாத்திமா ஹஸ்னா, அஞ்சல் திணைக்கள உள்ளக கணக்காய்வு உதவி அத்தியட்சகராக பதவி உயர்வு வழங்கப்படுவதற்கு முன்னர் இலங்கை அஞ்சல் பயிற்சி நிறுவகத்தில் அஞ்சல் பயிற்சிப் போதனாசிரியராகப் பணியாற்றினார்.

அஞ்சல் திணைக்களத்தினால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட உதவி அஞ்சல் அத்தியட்சகர்களுக்கான பரீட்சையில் அஞ்சல் திணைக்களத்தில் அதிகாரிகளாகப் பணியாற்றிய 39 பேர் தேர்ச்சிபெற்றிருந்தனர்.

அவ்வாறு சித்தியடைந்தவர்களில் 12 பேர் அஞ்சல் திணைக்கள உள்ளக கணக்காய்வு உதவி அத்தியட்கர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரச சேவைகள் ஆணைக்குழுவின் அறிவித்தலின் பிரகாரம் இந்த பதவி உயர்வு நியமனம் கடந்த 03.07.2025. அன்று தினத்திலிருந்து அமுலாவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிதி சேகரிக்கும் பாடசாலைகள் மீது நடவடிக்கை



நாட்டிலுள்ள அரசாங்க பாடசாலைகளில் இடம்பெறும் பல்வேறு நிகழ்வுக்ள் விளையாட்டு போட்டிகள் மற்றும் உற்சவங்களை நடத்துவதற்காக மாணவர்களிடம் நிதி சேகரிப்பது தொடர்பில் கல்வியமைச்சு கவனம் செலுத்தி வருவதாக பிரதி கல்வி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்க பாடசாலைகளில் இவ்வாறு மாணவர்களிடம் நிதி சேகரிக்கப்பட்டு வருவதாக கல்வியமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பாடசாலைகளில் நிதி சேகரிக்கப்படுவதாக கூறப்படும் முறைப்பாடுகளை ஆராய்ந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் விசாரணைக் குழுவொன்றை நியமிக்கப்படவுள்ளது.

பாடசாலைகளில் நடைபெறும் உற்சவங்களுக்காக அவ்வாறு மாணவர்களின் பெற்றோர்களிடம் நிதியைப் பெற்றுக் கொள்ளக் கூடாது என கல்வியமைச்சு ஏற்கெனவே சுற்று நிருபம் ஒன்றின் மூலம் அறிவித்துள்ள நிலையிலும் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றது.

அதனை ஆராய்வதற்காகவே குழுவொன்று நியமிக்கப்படுவதாகவும் எவ்வாறாயினும், அரசாங்க பாடசாலைகளில் மாணவர்களிடம் பல்வேறு நடவடிக்கைகளுக்காக நிதி சேகரிப்பது தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகள் அதிகரித்து வருவதாகவும் பிரதியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# துமிந்த உள்ளிட்ட மூன்று பேரின் விளக்கமறியல் நீடிப்பு



முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க உள்ளிட்ட மூவரை எதிர்வரும் 15ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிஸ்ஸை நீதவான் நீதிமன்றம் திங்கட்கிழமை(07) அன்று உத்தரவிட்டுள்ளது.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள துமிந்த திசாநாயக்க உள்ளிட்ட மூவரும் திங்கட்கிழமை (07) அன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த மாதம் பொலிஸார் நடத்திய சோதனையின் போது, கொழும்பின் ஹேவ்லாக் நகரில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் இருந்து இந்த துப்பாக்கி மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. விபத்தில் சிறுவன் பலி



மட்டக்களப்பு - பதுளை பிரதான வீதியில் உறுகாமம் பிரதேசத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் ஏழு வயதுடைய சிறுவன் உயிரிழந்துள்ள சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (06) அன்று இடம் பெற்றுள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உறுகாமம் பிரதேசத்தைச் சேர்ந்த புவனேஸ்வரன் கபிஷேக் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவனின் தாயார் பேருந்தில் இருந்து மகனைக் கீழே இறக்கி விட்டு மகளை இறக்குவதற்காக மீண்டும் பஸ் வண்டிக்குள் ஏறும்போது, குறித்த சிறுவன் பேருந்தின் முன்புறமாக வீதியைக் கடந்து செல்ல முற்பட்ட வேளை அதே வீதியில் வேகமாக வந்த தனியார் பேருந்து சிறுவன் மீது மோதியுள்ளது.

இதனால் படுகாயமடைந்த சிறுவன் கரடியனாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

சிறுவனின் சடலம் ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் திடீர் மரண விசாரணை அதிகாரி எம். எஸ்.எம்.நசிர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

# ஐஸ், ஹெரோயினுடன் மூன்று பேர் கைது

■ பாறுக் ஷிஹான்



இரண்டு மோட்டார் சைக்கிள் மூலம் போதைப் பொருட்களைக் கடத்திய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அட்டாளைச்சேனை டீன் மாவத்தை ஊடாக போதைப் பொருட்கள் கடத்தல் மேற்கொள்ளப்படுவதாகக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய ஞாயிற்றுக்கிழமை(6) அன்று பொலிஸாரால் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிளில் வருகை தந்த மூவரைக் கைது செய்த பொலிஸார் அவர்கள் வசம் இருந்து போதைப் பொருட்களை மீட்டுள்ளனர். இதன்போது, 84 கிராம் 620 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளை வைத்திருந்த சந்தேக நபர் மன்னார் நீதிமன்றத்தின் திறந்த பிடி விறாந்து பெற்ற நபர் என்பது தெரியவந்தது.

அத்துடன், மற்றுமொரு சந்தேக நபர் வசம் இருந்து 24 கிராம் 940 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும் மூன்றாவது சந்தேக நபரிடம் இருந்து 31 கிராம் 5 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் பொலிஸாரினால் மீட்கப்பட்டது.

இவ்வாறு கைதான மூன்று சந்தேக நபர்கள் மற்றும் அவர்கள் பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் மீட்ட பொலிஸார் சட்ட நடவடிக்கைக்காக அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.




# உயிருக்கு போராடிய நபர்; அம்பியூலன்ஸ் விட மறுத்த மருதங்கேணி வைத்தியசாலை

■ பூ.லின்ரன்



யாழ். வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பொதுச் சந்தையில் மயங்கி விழுந்து உயிருக்குப் போராடிய நபரை கொண்டு செல்வதற்கு மருதங்கேணி வைத்தியசாலையில் அம்பியூலன்ஸ் உதவி மறுக்கப்பட்டுள்ளதாக நபர் ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வடமராட்சி, கிழக்கு மருதங்கேணியில் அமைந்திருக்கின்ற பொதுச் சந்தையில் காய்கறிகள் வாங்குவதற்காகத் திங்கட்கிழமை (7) காலை வந்த ஒருவர் காய்கறிகளைக் கொள்வனவு செய்து கொண்டிருந்த போது, திடீரென வலிப்பு ஏற்பட்டு மயங்கி கீழே விழுந்துள்ளார். இதன்போது குறித்த நபரின் தலையில் காயம் ஏற்பட்டு இரத்தம் வடிந்து ஓடியுள்ளது.

இந்த நிலையில், குறித்த சந்தையில் இருந்த ஒருவர் உடனடியாக அருகில் உள்ள மருதங்கேணி வைத்தியசாலைக்குச் சென்று வைத்தியசாலையிலிருந்த அம்பியூலன்ஸ் சாரதியிடம் விடயத்தை தெரியப்படுத்திய போது, அம்பியூலன்ஸ் விட முடியாது என்றும் வைத்தியர் தூங்குவதாகவும் தெரிவித்திருந்தார். எனினும், வைத்தியரை ஒருமுறை கேட்டு சொல்வதாகத் தெரிவித்து, பின்னர் 1990 என்னும் அவசர இலக்கத்திற்கு அழைத்து வேறு அம்பியூலன்ஸை அழைக்குமாறும் குறித்த சாரதி கூறியுள்ளார்.

பின்னர், உயிருக்கு போராடிக் கொண்டிருந்த நபரை காப்பாற்றுவதற்காக 1990 இலக்கத்திற்கு அழைத்து அம்பியூலன்ஸை வரவழைத்ததாகக் குறித்த நபர் குற்றம் சாட்டியுள்ளார்.

அண்மைக் காலமாக மக்கள் மருத்துவ தேவைகளை பெறுவதில் மருதங்கேணி வைத்தியசாலையில் தொடர்ந்து சிக்கல்களை எதிர்நோக்கி வருவதுடன், இவ்வாறு அவசர தேவைக்கு உதவாத இவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஒரு பொதுமனாக கேட்டுக் கொள்வதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கடலட்டைகளுடன் இருவர் கைது

■ ரஸீன் ரஸ்மீன்



புத்தளம், கற்பிட்டி - கப்பலடி கடற்பிரதேசத்தில் பெருந்தொகையான உலர்ந்த கடலட்டைகளுடன், இருவர் சனிக்கிழமை (05) அன்று கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் 37 மற்றும் 49 வயதுடையவர்கள் எனவும் இவர்கள் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் கடற்படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் கீழ் விஜய கடற்படையினர் குறித்த கடற்பிரதேசத்தில் மேற்கொண்ட சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, சந்தேகத்திற்கிடமான ஒரு டிங்கி படகு கண்காணிக்கப்பட்டு அதனை கடற்படையினர் சோதனை செய்துள்ளனர்.

இதன்போது, கடலட்டைகளை கொண்டு செல்வதற்கு வழங்கப்பட்டுள்ள செல்லுபடியான உரிமத்தில் 250 கிலோ கிராம் மாத்திரமே அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், சந்தேக நபர்கள் 673 கிலோ கிராம் கடலட்டைகளை சட்டவிரோதமாக எடுத்துச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கடலட்டைகள் மற்றும் டிங்கி படகு என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் மீன்பிடி அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.






# ATM மோசடியில் ஈடுபட்டவர் போதைப் பொருளுடன் கைது

போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்ட ஒருவர் பல ஏ.டி.எம். அட்டைகள் மோசடி தொடர்பாகத் தேடப்பட்டு வந்த சந்தேக நபராக அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோதர, எலி ஹவுஸ் சாலையில் ஞாயிற்றுக்கிழமை (06) நடத்தப்பட்ட சோதனையின் போது 37 வயதுடைய சந்தேக நபர் 12.8 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த நபரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, வெல்ல வீதி, மஹாபாகே, பிலியந்தலை, யக்கல மற்றும் பம்பலப்பிட்டி பகுதிகளில் பதிவான ஏ.டி.எம் அட்டை நிதி மோசடி தொடர்பாக அவர் தேடப்படும் நபர் என்பது கண்டறியப்பட்டது.

மேலும் விசாரணைகளில், கடுவெல நீதவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் 07 வழக்குகள் மற்றும் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் 02 வழக்குகள் தொடர்பாகத் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அலட்சியம், ஆபத்து குறித்த விழிப்புணர்வு இல்லாதது ஆபத்தானது

தேசிய விபத்து தடுப்பு வாரத்தில் ஜூலை 10ஆம் திகதி நீரில் மூழ்கும் விபத்தைத் தடுக்கும் நாளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மட்டக்களப்பு வாகரை கருப்பங்கேணி வாவியில் 10 மற்றும் 11 வயதான சிறுமிகள் இருவர், 11 வயதான சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், நீர்கொழும்பு - ஏத்துகல கடலில் மூழ்கி உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த 20, 21, 22 மற்றும் 34 வயதுடைய இளைஞர்கள் நால்வர் பொலிஸ் உயிர்காப்பு பிரிவினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர். இவ்விரு சம்பவங்களும் ஞாயிற்றுக்கிழமை (06) இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் 800 முதல் 1,000 இலங்கையர்கள் நீரில் மூழ்கி இறக்கின்றனர். அலட்சியம், ஆபத்து குறித்த விழிப்புணர்வு இல்லாதது மற்றும் விழிப்புணர்வு இருக்கும்போது, கூட நடவடிக்கை எடுக்காதது நீரில் மூழ்கும் விபத்துகளுக்கு முக்கிய காரணிகளாக அமைந்துள்ளன.

நீரில் மூழ்குவதால் மரணம் ஏற்படவில்லை என்றாலும், மூளைக்கு ஆக்ஸிஜன் பற்றாக்குறை மற்றும் பிற காரணங்களால் ஆபத்தானது அல்லாத ஆனால் நீண்டகால குறைபாடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது.

நீரில் மூழ்குவது பற்றி நாம் பேசும்போது, இவ்வளவு அடி அல்லது ஆழமான துளைகள், ஆழமான நீர் இருக்க வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம். அது அப்படியல்ல. கொஞ்சம் தண்ணீர் இருந்தால், நீரில் மூழ்குவதால் ஏற்படும் பிரச்சினைகள் இருக்கும்.

நீரில் மூழ்குவது எங்கும் நிகழலாம். அது கடல், ஏரி அல்லது ஆறு போன்ற பெரிய, பாயும் நீர்நிலையாக இருக்க வேண்டிய அவசியமில்லை. இலங்கையில் நீரில் மூழ்கும் இறப்புகளில் 18 சதவீதமானவை கிணறுகளில் மூழ்குவதால் ஏற்படுகின்றன.

'இங்கே நீந்த வேண்டாம்', 'இங்கே இறங்க வேண்டாம்' என்று பலகைகள் உள்ளன; சில சமயங்களில் கடலில், ஆறுகள், ஓடைகள் மற்றும் தொட்டிகளில் 'இந்த இடங்களில் நீந்த வேண்டாம்' அல்லது 'இந்த இடத்திற்கு அப்பால் செல்ல வேண்டாம்' என்று பலகைகள் உள்ளன. "நாம் அடிக்கடி செய்யும் தவறு, அந்த இடங்களில் அந்த வரம்புகளைத் தாண்டிச் செல்வதுதான், இங்கே, நீரில் மூழ்கும் விபத்துகளுக்கு முக்கிய காரணிகள் அலட்சியம், ஆபத்து குறித்த விழிப்புணர்வு இல்லாதது மற்றும் விழிப்புணர்வு இருக்கும்போது கூட நடவடிக்கை எடுக்காதது முக்கிய காரணங்களாகும்.

நீர்த்தேக்கங்களிலும் கடலிலும் இறப்புகள் பதிவாகியிருந்தாலும், குழந்தைகளுக்கு ஏற்படும் ஆபத்து பெரும்பாலும் வீடுகளுக்கு அருகிலேயே இடம்பெறுகின்றன. பொதுவாக வீடுகளுக்கு அருகில் நீரில் மூழ்கும் விபத்துக்கள் அதிகம் நிகழ்கின்றன, வேலி அமைக்கப்படாத பாதுகாப்பற்ற கிணறுகள், வெவ்வேறு விடயங்களுக்குத் தோண்டப்படும் குழிகள், முறையாக மூடப்படுவதில்லை. அந்த குழிகளில் நீர் நிரம்பிய பிறகு, அது உண்மையில் நீரில் மூழ்குவதற்கு வழிவகுக்கும்.

"வீட்டில் ஏற்படும் விபத்துகளுக்கான முழுப் பொறுப்பும் குடும்பத்தினரிடமே உள்ளது. பாதுகாப்பற்ற கிணறு இருந்தால், தண்ணீர் துளை இருந்தால், அல்லது ஒரு சிறு குழந்தை இன்னொரு சிறு குழந்தையுடன் விடப்பட்டால், மீன் தொட்டிகளில், மற்ற வீடுகளில் பூக்கள் கொண்ட சிறிய குளங்கள், தண்ணீர் மற்றும் தாமரை மலர்கள் கொண்ட தொட்டிகள் உள்ளன. அவை தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில்லை.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# அறுகம்பையில் என்ன நடக்கின்றது?

மொஹமட் பாதுஷா

இந்த உலகத்தின் அடிநாதமே நிலம் என்றுதான் சொல்ல வேண்டும். வரலாறு நெடுகிலும் நிலத்திற்காக போர்கள், போராட்டங்கள், படையெடுப்புக்கள் நடந்திருக்கின்றன. இன்றும் நடக்;கின்றன. காலனித்துவ காலம் முடிவடைந்த பின்னரும் கூட, நில ஆக்கிரமிப்பு என்பது ஏதோ ஒருவகையில் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது.

இலங்கையில் சிறுபான்மைச் சமூகங்களின் நிலங்களை பல்வேறு வழிகளிலும் சூறையாடுவதற்கான திட்டங்கள் காலகாலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. வடக்கில் 5,940 ஏக்கர் காணிகளை கையகப்படுத்தும் நோக்கில் அதன் உரிமைத்துவத்தை உறுதிப்படுத்துமாறு அரசாங்கம் வெளியிட்ட வர்த்தமானி இப்போது மீளப் பெறப்பட்டுள்ளமை இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

உள்நாட்டுச் சக்திகளால் அதாவது, அரச இயந்திரத்தினால், பிற சமூகங்களால், கம்பனிகளால், பண முதலைகளினால் காணிகள் கபளீகரம் செய்யப்படுவதற்குப் புறம்பாக வெளிநாட்டுச் சக்திகளும் வெவ்வேறு மறைமுக திட்டங்களின் ஊடாக இலங்கையில் காலூன்ற முனைகின்றன.

இவற்றுள் மூன்று வகையான முயற்சிகள் உள்ளன எனலாம். ஒன்று, இலங்கையில் வளங்களைப் பயன்படுத்தி வர்த்தகம் செய்வது. இரண்டாவது, பாதுகாப்பு மற்றும் அரசியல் நலன்களுக்காகக் காலூன்றுவது. மூன்றாவது, நில ஆக்கிரமிப்பு நோக்கில் வசிப்பது என்பவையாகும்.

இந்த மூன்றாவது வரிசையில்தான் இலங்கையில் இஸ்ரேல் அல்லது சினோனிஸ்டுகளின் ஆதிக்கம் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாகக் கருதப்படுகின்றது. கொழும்பு, புறநகர்ப் பகுதிகள் மற்றும் பொத்துவில் அறுகம்பேயிலும் இந்த நிலைமை தீவிரமடைந்துள்ளதாகத் தெரிகின்றது.

தென்னிலங்கையில் பல யூத கட்டிடங்கள் நிறுவப்பட்டுள்ளதாகவும் அதற்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்றத்திலேயே பல தடைவை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால், அரசாங்கம் தெளிவான விளக்கத்தை கொடுக்கவில்லை. 'தேடிப் பார்க்கின்றோம்', 'பின்னர் சபைக்கு அறிவிப்போம்' என்றுதான் கூறினார்கள்.

இலங்கை தற்போது சுற்றுலாத் துறையில் பெரிதும் தங்கியுள்ளது. இஸ்ரேலியர்கள் அதிகளவு வருகின்றனர். அவர்கள் அதிகம் விரும்பும் இடமாக அறுகம் குடாவும் உள்ளது.

இங்கு பல உணவகங்களை இஸ்ரேலியர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் நடத்தி வருவதாகக் கூறப்படுகின்றது. அதுமட்டுமன்றி, 'சபாட் இல்லம்' என்ற பெயரில் யூத மத்திய நிலையம் ஒன்று உள்ளதாகவும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தது.

எனவே, இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் சுற்றுலாத் துறைக்குப் பாதிப்பு வரும் என்ற தோரணையில்தான் அரசாங்கம் கருத்து வெளியிடுகின்றது. ஆனால், இதனால் நீண்டகாலத்தில் ஏற்படப் போகும் பாதிப்பு பற்றி முன்னுணர்ந்ததாக தெரியவில்லை.

நில ஆக்கிரமிப்பு விடயத்தில் யூதர்கள் கைதேர்ந்தவர்கள். நாடற்றவர்களாக இருந்த தமக்குக் குடியேற இடங்கொடுத்த பலஸ்தீன மக்களைக் கொன்றுவிட்டு அந்த நிலத்தை முழுமையாகக் கையகப்படுத்த இஸேரலும் அதன் கூட்டாளியான அமெரிக்காவும் ஆடுகின்ற நாடகங்களும் நடத்துகின்ற அக்கிரமங்களும் உலகுக்கே தெரியும்.

இந்தப் பின்னணியில், இந்தோனேசியா போன்ற நாடுகளில் இருந்து சுற்றுலா விசாவில் வருபவர்கள் வேறு காரியங்களில் ஈடுபடுவது சட்டப்படி குற்றமாகக் கருதப்படுகின்ற நமது நாட்டில் யூதர்களுக்கு மட்டும் இந்தளவுக்கு இடம் வழங்கப்படுவதன் மர்மம் என்ன?

அறுகம்பையில் இஸ்ரேலிய பின்னணியுடனான உணவகங்கள் உள்ளதாகக் கூறப்படுகின்றது. அதுமட்டுமன்றி, அங்குள்ள சபாட் யூத தலமும் உள்ளது. இதனை மையமாக வைத்து ஈரான் தாக்கலாம் என்ற செய்தியும் அண்மையில் வெளியாகி பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது. இந்நிலையில், அங்கு இப்போது இராணுவ காலவரண்கள் நிறுவப்பட்டுள்ளன.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசத்தில் யூதர்களின் ஆக்கிரமிப்பிற்கு இடமளிப்பதும், அங்கு நீண்ட காலமாகக் காலூன்ற முனைபவர்களை (சுற்றுலாப் பயணிகளை அல்ல) அங்கிருந்து அகற்ற முயற்சிக்காமல், அவர்களது பாதுகாப்புக்காக இத்தனை ஏற்பாடுகளைச் செய்வதும் ஏன் என்ற கேள்வி அங்குள்ள சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்களிடையே உள்ளது.

அறுகம்பையில் தாக்குதல் நடத்தப்படப் போவதாக சர்ச்சைகள் வெடித்த பிறகு சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்கள் சூத்திரதாரிகளா அவர்களது திட்டம் என்ன என்பதை சட்டத்தை நடைமுறைப்படுத்துவோரே கண்டறிய வேண்டும். குற்றம் நிரூபிக்கப்பட்டால் தண்டனை வழங்கப்படவும் வேண்டும்.

அது வேறு விடயம். ஆனால், அமெரிக்க ஜனாதிபதிக்கு எதிரான தாக்குதல் முயற்சியுடன், அறுகம்பை விவகாரத்துடன் தொடர்புபட்ட சந்தேகநர் ஒருவரது பெயர் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளதாக ஆய்வாளர் ஒருவர் கூறியுள்ளார். இது உண்மையென்றால் இது பாரதூரமான விடயமாகும்.

இதேவேளை, பொத்துவில், அறுகம்பை பிரதேசத்தில் பல வழிகளிலும் மெல்ல மெல்ல யூதர்கள் குடியேற்றப்பட்டு லகுகலை முதல் பாணமை வரையான நிலப்பரப்பை யூதர்கள் பெரும்பான்மையாக வாழும் பிராந்தியமாக மாற்றியமைக்கப்படுவதற்கான சாத்தியமிருப்பதான சட்டத்தரணி சர்ஜூன் ஜமால்டீன் கூறுகின்றார்.

இது முக்கியமான விடயமாகும். இதனை வெறுமனே ஒரு சமூகத்துடன் அல்லது சிறிய நிலப்பரப்புடன் தொடர்புபட்ட விவகாரமாக அரசாங்கம் பார்க்கக் கூடாது.

ஏனெனில், யூதர்களின் ஆக்கிரமிப்பு உத்திகள் மற்றும் நகர்வுகளால் உலகத்தில் ஏற்பட்ட இழப்புக்கள் பற்றி அரச இயந்திரம் அறியாதிருக்க முடியாது. அத்துடன், வீதியால் போகின்ற ஓணானை ஏன் நாம் ஆடைக்குள் பிடித்துப் போட வேண்டும்? பொத்துவிலை ஏன் ஒரு ஆபத்தான பகுதியாக நாம் வைத்திருக்க வேண்டும்?

இந்த அச்சம் அநாவசியமானதாகக் கூட இருக்கலாம். இப்படியொரு நிலைமை வராமல் கூடப் போகலாம். ஆனால், யூதர்கள் இதனை உலகில் பல இடங்களில் செய்திருக்கின்றார்கள். நில விவகாரங்களில் மட்டுமன்றி அமெரிக்கா போன்ற நாடுகளில் தீர்மானமெடுக்கும் கதிரைகளைக் கூட அவர்கள் ஆட்கொண்டுள்ளார்கள் என்பதை உலகறியும்.

அதேபோன்று, அம்பாறை மாவட்டத்திலும் நில ஆக்கிரமிப்பு ஏலவே நடந்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து அம்பாறை ஒரு தனி மாவட்டமாகப் பிரிக்கப்பட்ட போது, இப்பகுதியில் சிறுபான்மையினர் பெரும்பான்மையாக வாழ்ந்தனர்.

ஆனால், இப்போது முஸ்லிம் மக்களின் எண்ணிக்கைக்கும் சிங்களவர்களின் எண்ணிக்கைக்கும் பெரிய வித்தியாசங்கள் இல்லை.

கல்லோயா திட்டம், தெஹியத்தக்கண்டிய பிரதேசத்தை உட்சேர்த்தது உள்ளடங்கலாகப் பல திட்டங்கள் ஊடாக திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டன. இதனால் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த சிங்கள மக்கள் இங்கு வந்து நில உரிமை பெற்றார்கள் என்பதே வரலாறு.

இன்று ஒட்டுமொத்த கிழக்கு மாகாணத்திலும் குறிப்பாக அம்பாறை மாவட்டத்திலும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் தொடர்பான பிரச்சினைகள் முஸ்லிம்களுக்கு உள்ளன. சனத்தொகைக்கு ஏற்ப காணிகள் பிரித்தொதுக்கப்பட வேண்டும் என்ற நியதி இருந்த போதும் அது நடக்கவில்லை.

ஆனால், அதற்கு மாறாக, லகுகல, மகாஓயா உள்ளடங்கலாகப் பல பிரதேசங்களில் சிங்கள மக்களின் எண்ணிக்கைக்கு அமையக் கொடுக்கப்பட வேண்டிய விகிதாசார அடிப்படையிலான காணிகளை விட, பன்மடங்கு காணிகள் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தொடர்ச்சியாக சிறுபான்மை சமூக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

இப்படி ஓருபுறம் சிங்கள குடியேற்றங்களாலும் அவர்களுக்கு அதிகமான காணிகளை வழங்குவதாலும் அம்பாறை மாவட்ட முஸ்லிம், தமிழ் மக்கள் மறைமுகமாக நில ஊடுருவலை எதிர்கொண்டுள்ள ஒரு சூழலில், அறுகம்பையில் இஸேரலியர்கள் நிலைகொள்வது எங்கு போய் முடியும் என்பதை சிந்திக்காமல் விட முடியாது.

இது மிகவும் சீரியஸான விடயமாகும். இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் வந்து போவதால் நாட்டு வருமானம் கிடைக்கின்றது என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆயினும், அவர்கள் இங்கே சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி கடைகளை நடத்துவதற்கும், சூட்சுமமான முறையில் கட்டிடங்களை, வழிபாட்டுத் தலங்களை நிறுவுவதற்கும் இடமளிக்க முடியாது.

அறுகம்பையில் மட்டுமன்றி, நாட்டின் பல இடங்களிலும் நடக்கும் இவ்வகையான ஊடுருவலை பொறுப்புவாய்ந்த அரசாங்கமும் நாட்டு மக்களும் கண்டும்காணாது போல் இருப்பதும், எதிர்காலத்தில் பிரச்சினைகளை, நெருக்கடிகளை விலைகொடுத்து வாங்குவதற்கு முன்பணம் செலுத்துவதைப் போன்றதாகவே அமையும்.



## வாழ்வியல் தரிசனம்

துன்பங்களை, இன்பங்களுக்குள் திணித்தலாகாது. சந்தோஷமான தருணங்களில் கூட, துன்பங்களை நினைத்து உருகிக்கொண்டிருக்கும் அல்லது புலம்பிக்கொண்டிருக்கும் பிரகிருதிகள் ஏராளம் பேர் இருக்கிறார்கள்.

துன்பங்களை, சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது எனப் பலர், தங்களின் மதிநுட்பத்தைப் பயன்படுத்துவார்கள். அல்லது, தங்களுக்கு நம்பிக்கையானவர்களுடன் ஆலோசனை செய்வார்கள். ஆனால், இத்தகைய அணுகுமுறைகளை விட்டுவிட்டு, சிலர் தமது மனம் போன போக்கின்படி, நடந்துகொள்வார்கள். இது அழிவின் பாதைக்கே இட்டுச்செல்லும். எந்தவொரு மனிதனின் மனநிலையும் எப்பொழுதும் ஒரே நிலையில் இருப்பதில்லை. அன்றாடம், ஏதோ விதமாக வரும் சின்ன சின்ன பிரச்சினைகள் வரலாம்; அவை எவற்றையும் ஊதிப்பெருப்பிப்பது அறிவீனம்.

சுலபமாகக் கிடைக்கும், உழைப்பற்ற வருமானங்கள் நிரந்தரமானவை அல்ல, வாழ்க்கையின் உச்சத்தைத் தொட்டவர்கள், மேலான கஷ்டங்களை அனுபவித்து, அதிலிருந்து மீண்டவர்களாகவே இருப்பார்கள்.

குறிப்பிட்டவர்களுக்கு என சோதனை வருவதில்லை. சோதனைகளுக்குள் மூழ்குவது வாழ்க்கை அல்ல; எல்லாமே புதியன அல்ல; புத்திசாலிகள், அறிவுத்திறன் உள்ளவர்கள், எதுநடந்தாலும் தொடர்ந்து, சிந்தித்து, சரியாகச் செயற்பட்டு, தங்கள் வழியில் செல்கிறார்கள். துணிவுதான் மனிதனை உருவாக்குகின்றது.

-பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### புதிய கடைகளை கண்டு கொள்ளாத மாநகர சபை

வவுனியா பள்ளிவாசல் அருகாமையில் அனுமதியின்றி வீதியோரம் புதிய கடை ஒன்று அமைக்கப்பட்டு வரும் நிலையில், வவுனியா மாநகர சபை இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வவுனியா நகரின் பல பகுதிகளில் வீதியோர வியாபார நடவடிக்கைகளை வவுனியா மாநகர சபை அகற்றி வருகிறது. இருந்தபோதும், பள்ளிவாசல் அருகாமையில் உள்ள வீதியோரத்தில், கடை கட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் வவுனியா மாநகர மேயர் சு.காண்டீபனுக்கு பலரும் முறையிட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் சனி, ஞாயிறு விடுமுறை தினத்தைப் பயன்படுத்திக் கட்டப்படும் குறித்த கட்டுமான நடவடிக்கை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாகவும் பலரும் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதில் வவுனியா மாநகர சபை பாரபட்சம் காட்டுவதாகவும், முன்னாள் அமைச்சர் றிசாட் பதியுதீன் ஆதரவுடன் மேயர் பதவிக்கு வந்தமையால் முஸ்லிம் வர்த்தகர்கள் வீதியோரத்தில் நிலையான கட்டிடம் கட்டி வியாபாரம் செய்ய அனுமதி வழங்கியுள்ளதுடன், தமிழ் வியாபாரிகளைப் பழி வாங்குவதாகவும் பாதிக்கப்பட்ட சிறு வியாபாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர். இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் சிறு வியாபாரிகள் கோரியுள்ளனர்.

- க.அகரன்



செம்மணி மனிதப் புதைகுழியில் ஞாயிற்றுக்கிழமை (06) அன்றுஇரண்டாவது கட்டத்தின் 12வது நாள் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அந்தவகையில், ஞாயிற்றுக்கிழமை (06) வரையிலும் 44 எலும்புக்கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டதுடன் 47 எலும்புக்கூடுகள் இதுவரை அடையாளம் காணப்பட்டன. அவற்றில் பெரும்பாலானவை சிறுவர்களின் சடலங்களாக இருக்கின்றன. அத்துடன், குழந்தையின் உடலைச் சுற்றி ஆணிகள் அடிக்கப்பட்டதற்கான தடயங்கள் இருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.
இந்த செம்மணி விவகாரம் தொடர்பில், எமது சகோதரர பத்திரிக்கையான டெயிலிமிரரின் பத்திரிகையாளர் கமந்தி விக்ரமசிங்க, கிருஷாந்தி குமாரசாமி வழக்கின் அரச சட்டத்தரணி பிரசாந்தி மஹிந்தரத்னவுடன், ஒரு பிரத்தியேக நேர்காணல் 2025 ஜூலை 3 அன்று வெளியாகியிருந்தது.

## மரண தண்டனை கைதியின் அறிக்கை இல்லாவிட்டால்

# செம்மணிப் புதைகுழி இரகசியமான புதைகுழி

செம்மணிப் புதைகுழியில் நடைபெற்று வரும் உடல்களைத் தோண்டும் நடவடிக்கைகள் போரின் போது நடந்த கொடூரமான அட்டூழியங்களை வெளிப்படுத்துகின்றன. ஆனால், மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரின் அறிக்கை மட்டும் இல்லாவிட்டால் இந்தப் புதைகுழி இலங்கை மண்ணில் புதைக்கப்பட்ட ஒரு ரகசியமாக இருந்திருக்கும்.

கிருஷாந்தி குமாரசாமி வழக்கில் முக்கிய குற்றவாளி 1998ஆம் ஆண்டு மரண தண்டனை விதிக்கப்பட்டபோது, செம்மணிப் புதைகுழியை வெளிப்படுத்தினார். சமீபத்தில் இந்த குற்றவாளி மற்றும் பலர் தங்கள் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றக் கோரி தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்தது.

அவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படாவிட்டால் அல்லது அவர்களின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றினால் அவர்களுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப் பரிசீலிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் வாதிட்டனர்.

குற்றத்தின் கொடூரத்தையும் பாலியல் வன்கொடுமை மற்றும் கொலைக் குற்றவாளிகளைத் தண்டிக்க புலனாய்வாளர்கள் சாட்சியங்களைக் கண்டுபிடித்தனர் என்பதையும் இந்த நேர்காணலின் போது, அவர் எடுத்துரைத்தார். பாலியல் வன்கொடுமையைப் போர் ஆயுதமாகப் பயன்படுத்திய சம்பவங்களில் ஒன்றாக இது இருந்ததால் குற்றவாளிகள் மீது பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டை முன்வைப்பதில் சட்டத்தரணிர்கள் உறுதியாக இருந்தனர்.

### ஆரம்ப அறிக்கைகள்

1996 செப்டெம்பர் 7 அன்று யாழ்ப்பாணம், கைதடியில் நான்கு பேர் காணாமல் போனார்கள். அவர்களில் ஒருவர் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசாமி (18) ஆவார். அவர் அன்றுதான் தான் உயர் தர வேதியியல் பரீட்சையை எழுதியிருந்தார். அவர் ஒரு சிறந்த மாணவி தனது சாதாரண தரத்தில் ஏழு சிறப்புத் தேர்வுகளைப் பெற்றிருந்தார். கிருஷாந்தி தனது தந்தையை இழந்தவர். மேலும் அவர் தனது தாயார் ராசம்மா (59) மற்றும் யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரியில் படிக்கும் சகோதரர் பிரணவன் (16) ஆகியோருடன் வசித்து வந்தார். அவருக்கு கொழும்பில் உயர்கல்வி பயின்று வந்த பிரசாந்தி என்ற சகோதரியும் இருந்தார்.

கிருஷாந்தியும் பிரணவனும் இருவரும் திறமையான மாணவர்கள். அவர்களின் தாயார் கைதடி முத்துகமரசுவாமி மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் ஆவார். மேலும் அவர் இறக்கும் போது கைதடி மகா வித்தியாலயத்தில் கற்பித்துக் கொண்டிருந்தார்.

அவரது தாயார் பள்ளியிலிருந்து கிருஷாந்தி வருகைக்காக ஆவலுடன் காத்திருந்தாலும் மதியம் வரை கிருஷாந்தி வீடு திரும்பாததால் அவர் சங்கடப்பட்டார்.

அதைத் தொடர்ந்து குமாரசாமி குடும்பத்தின் பக்கத்து வீட்டுக்காரரும் நண்பருமான சிதம்பரம் கிருபாமூர்த்தி ராசம்மா பிரணவன் மற்றும் ஆகியோர் ஒரே நாளில் காணாமல் போனார்கள்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆட்சிக்கு வந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இந்த சம்பவம் நடந்தது.

மோதலின் போது, ஆயிரக்கணக்கான கிருஷாந்திகள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்டிருக்கலாம். ஆனால் கொழும்பிற்கு கதையை கொண்டு வரக்கூடிய ஒருவருடன் தொடர்பு இல்லாததால் அவர்களால் அதைப் பற்றி வெளியே சொல்ல முடியவில்லை.

ஆரம்பத்தில் சிபிகேயுடன் (சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க) இந்த விஷயத்தை எழுப்பியவர் ஒரு வழக்கறிஞர். இந்த சம்பவம் பற்றி சிபிகே கேள்விப்பட்டதும் அப்போதைய சட்டமா அதிபர் சரத் சில்வா உடனடியாக வழக்கை விசாரிக்க அறிவுறுத்தப்பட்டார். "இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த ஒரு பகுதியில் அவர்கள் காணாமல் போனதால் சம்பந்தப்பட்டவர்களுக்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்ய சிபிகே விரும்பினார்" என்று டெய்லி மிரருக்கு அளித்த பேட்டியில் பிரசாந்தி மஹிந்தரத்ன கூறினார்.

தொடர்ச்சி P6



### மரண தண்டனை கைதியின் அறிக்கை இல்லாவிட்டால்

# செம்மணிப் புதைகுழி இரகசியமான புதைகுழி



(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அந்த நேரத்தில், அவர் 1991இல் சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஒரு இளம் வழக்கறிஞராக இருந்தார். “இந்த சம்பவம் 1996இல் நடந்தது. எனக்கு அழைப்பு வந்து யாழ்ப்பாணம் செல்ல விருப்பமா என்று கேட்டார்.. அந்த நேரத்தில் வணிக விமானங்கள் எதுவும் இல்லை மேலும் குற்றப் புலனாய்வுத் துறையின் (சி.ஐ.டி.) அதிகாரிகளும் என்னுடன் இருந்தனர். எனக்கு வழிகாட்டுதல் வழங்குவதற்காக மறைந்த சொலிசிட்டர் ஜெனரல் டி.பி.குமாரசிங்கவையும் சட்டமா அதிபர் நியமித்தார்” என்று அவர் நினைவு கூர்ந்தார்.

## பிரசாந்தி மஹிந்தரத்ன யாழ்ப்பாணம்

செம்மணிக்கு சென்றார் . அவர் செம்மணி நீதவான்நீதிமன்றத்திற்குச் சென்று இராணுவ போலீசாருடன் பேசுவதில் ஈடுபட்டிருந்தார். “இப்படித்தான் எல்லாம் தொடங்கியது. நாங்கள் தொடங்கியபோது எங்களிடம் எந்த ஆதாரமும் இல்லை. அந்தப் பகுதி இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்தது என்பதும் காணாமல் போன நான்கு பேர் கைதடியில் வசித்து வந்தனர் என்பதும் செம்மணி சோதனைச் சாவடியில் அவர்கள் காணாமல் போனதாக சில பேச்சுக்கள் இருந்தன என்பதும் மட்டுமே எங்களுக்குத் தெரியும்” என்று பிரசாந்தி மேலும் கூறினார்.

## ஆதாரங்களின் பாதையில்...

அடுத்தடுத்த விசாரணைகளில் கிருஷாந்திதனது பரீட்சையை முடித்துக்கொண்டு பிறகு மற்றொரு தோழி சுந்தரம் கௌதமியுடன் சிலநாட்களிற்கு முன்னர் உயிரிழந்த சக மாணவிக்கு இறுதி அஞ்சலி செலுத்தச் சென்றது தெரியவந்தது. “அவர்கள் இருவரும் சைக்கிளில் இருந்தனர் ஒரு கட்டத்தில் அவர்கள் புறப்பட்டுச் சென்றனர் கடைசியாக அவர் கைதடி நோக்கிச் சென்றிருந்தார். தனது பள்ளியிலிருந்து கைதடிக்கு வரும்போது செம்மணி பாதுகாப்பு சோதனைச் சாவடியைக் கடக்க வேண்டும். இது அவள் பல ஆண்டுகளாகப் பின்பற்றி வந்த பாதை மேலும் சோதனைச் சாவடியில் இருப்பவர்கள் அவளை நன்கு அறிந்திருப்பார்கள்.”

“எங்கள் விசாரணையில் அவள் அங்கு நிறுத்தப்பட்டு விசாரணைக்காக சாக்குப்போக்கில் பதுங்கு குழிக்குள் அழைத்துச் செல்லப்பட்டு வலுக்கட்டாயமாகத் தடுத்து வைக்கப்பட்டதாகத் தெரியவந்தது. யாராவது அவளை அங்கு விசாரிக்கப்படுவதைக் கண்டிருக்கலாம். இந்த கட்டத்தில் அவள் வீடு திரும்பாததால் அவள் தாயார் மிகவும் வருத்தமடைந்து அவள் இருக்கும் இடம் பற்றி மக்களிடம் கேட்டுக்கொண்டிருந்தார்.“

எனவே அவர்களின் பக்கத்து வீட்டுக்காரர் கிருபமூர்த்தி வந்து செம்மணி சோதனைச் சாவடியில் விசாரிக்கப்படுவதாகக் கேள்விப்பட்டதாகக் கூறினார். அவர் கொல்லப்பட்டதால் அவருக்கு அது எப்படித் தெரிந்தது என்று எங்களுக்குத் தெரியவில்லை ”என்று பிரசாந்தி கூறினார்

கிட்டத்தட்ட உடனடியாக ராசம்மாபிரணவன் மற்றும் கிருபமூர்த்தி ஆகியோர் இரண்டு சைக்கிள்களில் ஏறினர். ராசம்மா பிரணவனின் சைக்கிளில் ஏறினார் கிருபமூர்த்தி தனது சைக்கிளில் சோதனைச் சாவடிக்குச் சென்று லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவிடம் (இந்த வழக்கில் முதல் குற்றவாளி) கிருஷாந்தி இருக்கும் இடம் குறித்து விசாரித்தார். “கிருஷாந்தி வீட்டிற்கு வரவில்லை என்றும் அவள் கடைசியாக இங்கே காணப்பட்டதாகவும் என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடிக்க விரும்புவதாகவும் அவர்கள் அவரிடம் கூறியிருந்தனர்.

சோமரத்ன பலமுறை தங்களுக்கு இது பற்றி எதுவும் தெரியாது என்று கூறியிருந்தார் ஆனால் இந்த மக்கள் அந்தப் பெண்ணைப் பற்றி அதிக அக்கறை கொண்டிருந்ததால் தொடர்ந்து கூறினர். இராணுவத்தினர் பீதியடைந்தனர் என்பது தெளிவாகத் தெரிந்தது பின்னர் இந்த மூவரும் கைது செய்யப்பட்டு வலுக்கட்டாயமாகத் தடுத்து வைக்கப்பட்டனர் ”என்று பிரசாந்தி மஹிந்தரத்ன நினைவு கூர்ந்தார்.

ஆனால் அவர்கள் தங்கள் வாழ்க்கையின் கடைசி சில மணிநேரங்களைத்தான் கழிக்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது. “அன்றிரவு இராணுவத்தினர் ராசம்மா பிரணவன் மற்றும் கிருபமூர்த்தி ஆகியோரை கழுத்தை நெரித்துக் கொன்றது மட்டுமல்லாமல், இரவு முழுவதும் கிருஷாந்தியையும் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்தனர். பின்னர் அவர்கள் அவளைக் கழுத்தை நெரித்துக் கொன்றனர். மேலும், நான்கு உடல்களும் செம்மணியில் உள்ள நீர் தேங்கிய பகுதியில் புதைக்கப்பட்டன. நாங்கள் உடல்களைத் தோண்டி எடுத்தபோது அவை அழுகிய நிலையில் இருந்தன. அவை கயிறுகளால் கழுத்தை நெரிக்கப்பட்டு இருபுறமும் இழுக்கப்பட்டன” என்று பிரசாந்தி மஹிந்தரத்ன மேலும் விளக்கினார்.

## அரசு இயந்திரத்தின் ஆதரவு

இன்றுவரை மஹிந்தரத்னே இராணுவ பொலிஸாரை முழுமையாகப் பாராட்டுகின்றார். அவர்கள் இல்லாமல் இந்த சம்பவம் எந்த துப்பும் இல்லாமல் புதைக்கப்பட்டிருக்கும். இராணுவமோ அல்லது இராணுவ காவல்துறையோ விசாரணைக்கு ஒத்துழைக்க மறுத்திருந்தால் குற்றவாளிகளைத் தண்டிக்க சட்டத்தரணிகள் எந்த கணிசமான ஆதாரத்தையும் கண்டுபிடித்திருக்க மாட்டார்கள்.

“பொறுப்புக்கூறல் குறித்து அரசியல் உறுதிப்பாடும் இராணுவத்தினர் உறுதிப்பாடும் காணப்பட்டது எங்கள் இராணுவம் ஒரு மையப்படுத்தப்பட்ட கட்டளையின் கீழ் செயல்படுகிறது மேலும் அனைத்தும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. செம்மணி சோதனைச் சாவடியில் இந்த மக்கள் காணாமல் போவது குறித்து சந்தேகம் எழுந்தபோது சோதனைச் சாவடியில் யார் பணியில் இருந்தார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். அந்த நேரத்தில் இராணுவ காவல் பிரிவு வேறு இடத்தில் இருந்தது. எனவே, அவர்கள் லான்ஸ் கோப்ரலையும் சோதனைச் சாவடியில் பணியில் இருந்த அனைவரையும் அழைத்து விசாரிக்கத் தொடங்கினர். “நிச்சயமாகக் குற்றவாளிகள் இராணுவ பொலிஸாரால் விசாரிக்கப்படுவதால் நிம்மதியாக உணர்ந்தார்கள் அவர்கள் தங்கள் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் ஒப்புக்கொண்டனர் மேலும் அந்த வாக்குமூலங்கள் இராணுவ பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டன. பாலியல் பலாத்காரம் உட்பட என்ன நடந்தது என்று அவர்கள் கூறினர்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் எங்களிடம் சூழ்நிலை ஆதாரங்கள் உள்ளன. மேலும், குற்றம் சாட்டப்பட்டவர் மற்றும் பாதிக்கப்பட்டவரைத் தவிர வேறு யாருக்கும் என்ன நடந்தது என்பது தெரியாது. ஆனால் இங்கே குற்றம் சாட்டப்பட்டவர்கள் இராணுவ பொலிஸாரிடம் பேச முடிவு செய்தனர். உடல்கள் எங்குப் புதைக்கப்பட்டன என்பதை அவர்கள் இராணுவ பொலிஸாருக்கு காட்டினர் பின்னர் உடல்கள் தோண்டி எடுக்கப்பட்டன” என்று மஹிந்தரத்ன மேலும் கூறினார்.

வழக்கின் சட்டத்தரணிகளான மஹிந்தரத்னே தண்டனை வழங்கப்படுவது குறித்து உறுதியாகவிருந்தார்.

மேலும் அவர்கள் விசாரணையைக் கையாண்ட விதத்தில் மிகவும் கவனமாக இருந்தனர். “அந்த நேரத்தில், பொதுமக்களுக்கும் இராணுவத்திற்கும் இடையில் நம்பிக்கை இல்லாததால் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்காக ‘இதயங்களும் மனங்களும்’ என்ற பிரசாரத்தை இராணுவம் முன்னெடுத்தது.

“யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவ பொலிஸ் தளபதி கர்னல் கலிங்க குணரத்னவுடன் பொறுப்புக்கூறல் மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற உண்மை குறித்து உரையாடியதை நான் நினைவில் கொள்கிறேன். எனவே எல்லாம் நன்றாக வேலை செய்தது. மேலும், வழக்கைத் தீர்ப்பதில் சி.ஐ.டி. ஆர்வமாக இருந்தது.சட்டமா அதிபர் திணைக்களம் முழு வீச்சில் செயற்பட்டது நான் விமானப்படையால் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். உங்களுக்கு உண்மையிலேயே தேவை அரசியல் விருப்பம் என்பதை இது நிரூபிக்கிறது மேலும் அந்த மாற்றம் உங்களுக்குத் தேவை” என்று அவர் மேலும் கூறினார்.

ஒவ்வொன்றாக ஒரு தடயம்

“காணாமல் போன நாற்பத்தைந்து நாட்களுக்குப் பிறகு 1996 அக்டோபர் மாத இறுதியில் எங்கோ உடல்கள் தோண்டி எடுக்கப்பட்டன. உடல்கள் தோண்டி எடுக்கப்பட்டபோது அவை அழுகிய நிலையிலிருந்தன. “

கொழும்பில் வசித்து வந்த குடும்பத்தில் உயிருடன் இருந்த ஒரே உறுப்பினரை அதிர்ச்சிக்குள்ளாக்கி எலும்புக்கூடுகளை அடையாளம் காண வைப்பதில் புலனாய்வாளர்கள் விரும்பவில்லை. “நாங்கள் அவளை சாட்சியமளிக்க அழைக்கவில்லை. பொதுவாக நாங்கள் குடும்ப உறுப்பினர்களை சாட்சியமளிக்க அழைக்கிறோம் ஆனால் அந்த சூழலில் அவளுக்குக் கூடுதல் துயரத்தைத் தவிர்க்க விரும்பவில்லை. சூழ்நிலைகளில் உடல்களை அடையாளம் காண மிகவும் பழமையான வழியை நாங்கள் கொண்டு வந்தோம்.”

“1996இல் எங்களிடம் டி.என்.ஏ. சோதனை இல்லை அதன் பிறகு நீண்ட காலத்திற்குப் பிறகுதான் இலங்கை டி.என்.ஏ. சோதனைகளை மேற்கொள்ளத் தொடங்கியது. இருப்பினும், ஒவ்வொரு வழக்கிலும் டி.என்.ஏ. சோதனைகளை மேற்கொள்ள எங்களிடம் இன்னும் முழு வளங்களும் இல்லை.”

“உடல்கள் தோண்டி எடுக்கப்பட்டபோது, அவர்களின் உடைகள் குறிப்பாக கிருஷாந்தியின் உடைகள் ஒரே குழியில் வீசப்பட்டன. ஒவ்வொரு துணியிலும் ஒரு தனித்துவமான சலவைத் தொழிலாளர் அடையாளமொன்று இருப்பதைக் கண்டோம். இந்த அடையாளம் (சலவைத் தொழிலாளர்கள் மற்றும் பெண்கள்) எந்த ஆடைகளை எந்த வீட்டிற்குச் சொந்தமானது என்பதை அடையாளம் காண்பதற்கானது. இது மிகவும் பழைமையான அணுகுமுறை. ஆனால், கிருஷாந்தியின் வழக்கில் காணாமல் போன நான்கு பேர் இவர்கள்தான் என்பதை நாங்கள் உறுதிப்படுத்த வேண்டியிருந்தது” என்று பிரசாந்தி கூறினார்.

இதையொட்டி, பிரசாந்தி மஹிந்தரத்னேவும் அவரது குழுவினரும்கைதடி பகுதியைச் சேர்ந்த சலவை தொழிலாளியை சாட்சியமளிக்க அழைத்தனர். குமாரசாமி வீட்டிற்கு அவர் திருப்பி அனுப்பிய ஆடைகள் ராசம்மா பிரணவன் மற்றும் கிருஷாந்தியின் ஆடைகள் என்று அவர் அடையாளம் கண்டார். கிருபாமூர்த்தியின் ஆடைகள் தனித்தனியாக அடையாளம் காணப்பட்டன.

ஆடைகளின் அடிப்படையில் உடல்களின் ஆரம்ப அடையாளம் இதுவாகும். கிருஷாந்தியின் ஆடைகள் தனித்துவமானவை. வெள்ளை சீருடை சிவப்பு டை மற்றும் காலணிகள். டையின் நிறத்தைத் தவிர அவரது பள்ளி சீருடையைப் போலவே சீருடையும் இருந்ததால் மஹிந்தரத்னே மிகவும் எரிச்சலடைந்தார்.

“நீதிமன்றங்கள் அந்த அடையாளத்தை போதுமானதாக எடுத்துக் கொண்டன. கூடுதலாக ராசம்மாவுக்கு குடலிறக்க அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. துரதிர்ஷ்டவசமாகப் போரின் உச்சம் என்பதால் பல் பதிவுகள் எதுவும் இல்லை மேலும் அவர்களிடம் சரியான பல் சேவைகள் இல்லை. ஒரு குடலிறக்கத்தில் ஒரு அறுவை சிகிச்சை பதிவு இருந்தது அதை நாங்கள் பொருத்த முடிந்தது அதனுடன் உடல்களை அடையாளம் காண முடிந்தது” என்று அவர் தொடர்ந்தார்.

தொடர்ச்சி P7

மரண தண்டனை கைதியின் அறிக்கை இல்லாவிட்டால்

# செம்மணிப் புதைகுழி இரகசியமான புதைகுழி



(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)



கதையின் சோகமான பகுதி என்னவென்றால், ஆரம்பத்தில் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டபோது, கிருஷாந்தி அதனை எதிர்த்தாள். சாட்சியங்களின்படி, அவள் ஒரு கட்டத்தில் எதிர்ப்பதைக் கைவிட்டாள். நான்காவது அல்லது ஐந்தாவது நபர் அவளை பாலியல் வன்கொடுமை செய்யச் சென்றபோது, அவள் அவர்களிடம் சிறிது நேரம் கொடுக்கச் சொன்னாள். அவள் தண்ணீர் கேட்டாள். அவர்கள் ஒரு வாளியில் தண்ணீர் கொண்டு வந்திருந்தார்கள். அவள் அந்த போரில் தான் வெற்றியடையப் போவதில்லை என்பதை உணர்ந்திருந்தாள்

தனக்கு வேறு வழியில்லை என்பதை ராசம்மா அறிந்தாள். அவள் தன் தாலியைக் கழற்றி முதல் குற்றவாளியிடம் கொடுத்து அதை தன் குடும்பத்தினரிடம் கொடுக்கும்படி சொன்னாள். ஆனால், அவர் அதைத் தனது சகோதரியிடம் கொடுத்தார். அது பின்னர் விசாரணைகளின் போது மீட்கப்பட்டது. அவர்கள் மூவரும் தங்கள் அடையாள அட்டைகளையும் சோதனைச் சாவடியில் கொடுத்தனர். இருப்பினும், அரசு போரின் போது, ஒரு பாலியல் வன்கொடுமை வழக்கை விசாரித்து வருவது இதுவே முதல் முறை என்பதால், அரசு, பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டை முன்வைப்பது சட்டத்தரணிகளுக்கு முக்கியமானது. பாலியல் வன்கொடுமையைப் போர் ஆயுதமாகப் பயன்படுத்திய முதல் சம்பவமும் இதுவே.

## வழமைக்கு மாறாக சிந்தித்தல்

“கிருஷாந்தியின் உடல் அழுகும் நிலையில் இருந்ததால் பாலியல் வன்கொடுமைக்கான தடயவியல் சான்றுகள் எதுவும் இல்லை. “எனவே வழமைக்கு மாறாக சிந்திக்க வேண்டியிருந்தது. “

“இராணுவத்தால் இராணுவ பொலிஸாரிடம் அளிக்கப்பட்ட வாக்குமூலங்களைப் பயன்படுத்துவோம் என்று நாங்கள் நினைத்தோம். ஆனால், சாட்சிய கட்டளைச் சட்டத்தின் கீழ் சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரிடம் அளிக்கும் எந்தவொரு வாக்குமூலமும் சந்தேக நபருக்கு எதிராக அடுத்தடுத்த விசாரணையில் ஏற்றுக்கொள்ள முடியாதது. எனவே, நாங்கள் இந்திய நீதித்துறையைப் பயன்படுத்தி ஒரு குடிமகன் ஒரு சிவிலியன் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளிக்கும்போது, அந்த பதற்றம் நிலவுகிறது என்று வாதிட்டோம். இராணுவவீரர் இராணுவ பொலிஸிடம் சாட்சியமளிக்கும்போது, ஒரே தொழிலில் உள்ளவரிடம் வாக்குமூலம் வழங்குகின்றார், பதற்றம் இல்லை என்று நாங்கள் கூறினோம்”

மேலும், இந்திய நீதித்துறையின் அடிப்படையில் சாட்சிய கட்டளைச் சட்டத்தின் தடை இராணுவ பொலிஸாரிடம் ஒரு சிப்பாய் அளித்த வாக்குமூலத்திற்குப் பொருந்தாது என்று நாங்கள் வாதிட்டோம். இருப்பினும், ட்ரயல்-அட்-பார் அதை உறுதி செய்த போதிலும், உச்ச நீதிமன்றம் அதை நிராகரித்தது. ஆனால், எங்களிடம் வேறு ஆதாரங்கள் இருந்தன. இது ஒரு மேன்முறையீட்டுப் பிரச்சினையாக இருக்கலாம் என்று நாங்கள் கவலைப்பட்டதால் இந்த ஆதாரத்தை மட்டும் நம்பியிருக்கவிரும்பவில்லை நம்ப விரும்பவில்லை” என்று அவர் தொடர்ந்தார்.

சோதனைச் சாவடியில் ஒன்பது வீரர்களைத் தவிர வேறு இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருந்ததை புலனாய்வாளர்கள் கண்டுபிடித்தனர். இராணுவ பொலிஸாருடனான கலந்துரையாடல்களின் போது, பொலிஸாருக்கும் இராணுவ பொலிஸாருக்கும் இடையிலான படிநிலை பதட்டங்களை புலனாய்வாளர்கள் கவனித்தனர்.

இராணுவம் பொலிஸ்காரர்களை உடல்களை அடக்கம் செய்யப் பயன்படுத்தியது. ஆனால், அத்தகைய கொடூரமான குற்றங்களில் அவர்களை ஈடுபடுத்தவில்லை என்பது கண்டறியப்பட்டது. “இரண்டு பொலிஸ்காரர்களும் சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்வதில் ஈடுபடவில்லை. ஆனால், அவர்கள் உடல்களை அப்புறப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர் என்பதை வாக்குமூலங்கள் வெளிப்படுத்தின. எனவே, நாங்கள் அவர்களுக்கு ‘நிபந்தனை மன்னிப்பு’ என்று அழைக்கப்படுவதை வழங்கினோம். குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் ஒரு சந்தேக நபருக்கு நிபந்தனை மன்னிப்பு வழங்கும் திறனைக் கொண்டுள்ளார். நிபந்தனை என்னவென்றால், அனைத்தையும் வெளிப்படுத்தி மற்ற குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடரப்படுவதற்கு எதிராக சாட்சியமளிப்பது. பாலியல் பலாத்கார குற்றச்சாட்டை முன்வைக்க நாங்கள் விரும்பியதால் அதைச் செய்யக்கூடிய ஒரே வழி ஒப்புதல் வாக்குமூலங்களுடன் சூதாடுவதுதான். ஆனால், எங்களிடம் எந்த சுயாதீனமான ஆதாரமும் இல்லை மேலும் இவர்கள்

நேரில் கண்ட சாட்சிகள். உச்ச நீதிமன்றம் ஒப்புதல் வாக்குமூலங்களை நிராகரித்த போதிலும் பாலியல் வன்கொடுமைக்கான தண்டனையை உறுதி செய்தது ஏனெனில் வழக்குத் தொடுப்பு இன்னும் போதுமான அளவு முன்னேறி பாலியல் வன்கொடுமையை நிரூபிக்க போதுமான ஆதாரங்களை சமர்ப்பித்துள்ளது” என்று அவர் விளக்கினார்.

மற்றொரு ஆதாரம் பிரணவனின் சைக்கிள் சங்கிலி உறை. அதில் ஹோண்டா என்ற பெயர் கொண்ட ஒரு என்ற அடையாளம் இருந்தது. மேலும் அந்தப் பகுதியில் உள்ள அனைவருக்கும் அது அவருடைய சைக்கிள் என்று தெரியும். அந்த என்ற அடையாளம் இருந்ததுபேட்ஜ் அருகிலுள்ள ஒரு சைக்கிள் திருத்தும் இடத்திலிருந்திருந்து மீட்கப்பட்டது. மேலும், இருந்த நபர் தனது சாட்சியத்தில் செம்மணி சோதனைச் சாவடிக்கு அருகில் அதனை எடுத்ததாக உறுதிப்படுத்தினார்.

## தண்டனை மற்றும் மற்றொரு அதிர்ச்சியூட்டும் வெளிப்பாடு

பின்னர் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். மேலும், உடல்கள் சட்ட மருத்துவ அதிகாரிகளால் பரிசோதனைக்காகக் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டன. உடல்கள் அழுகிய நிலையில் இருந்தபோதிலும், சட்ட மருத்துவ அதிகாரிகளால் மரணத்திற்கான காரணத்தைத் தீர்மானிக்க முடிந்தது அது கழுத்தை நெரித்தல்.

சட்டத்தரணிகள் முதல் குற்றவாளியின் சகோதரியிடமிருந்து ராசம்மாவின் தாலியை மீட்டனர். அனைத்து சூழ்நிலை ஆதாரங்களுடனும் என்ன நடந்தது என்பது குறித்து சாட்சியமளித்த இரண்டு சுயாதீன சாட்சிகளுடனும் வழக்குத் தொடுப்பு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட ஆதாரத்திற்கு வழிவகுத்துள்ளது என்று நீதிமன்றங்கள் கண்டறிந்தன.

பின்னர் குற்றம் சாட்டப்பட்டவர்கள் கொலைக் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டனர். உச்ச நீதிமன்றம் இந்த தண்டனையை உறுதிப்படுத்தியது. “இதனால்தான் அவர்கள் 27 ஆண்டுகளுக்குப் பிறகு உச்ச நீதிமன்றத்தில் ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தனர் அவர்கள் நீண்ட காலமாக மரண தண்டனையில் இருப்பதாகவும் அவர்களை விடுவிக்கக் கோரியும்” என்று மஹிந்தரத்ன மேலும் கூறினார்.

இந்த கட்டத்தில்தான் முக்கிய குற்றவாளி மற்றொரு அதிர்ச்சியூட்டும் தகவலை வெளியிட்டார். “நமது நீதிமன்றங்களில் நீதிபதிகள் குற்றவாளிகளிடம் மரண தண்டனை விதிக்கப்படுவதற்கு முன்பு அவர்களிடம் ஏதாவது சொல்ல வேண்டுமா என்று கேட்பது வழக்கம்.

அந்த நேரத்தில் முதல் குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ஷ “நாங்கள் நான்கு பேரைக் கொன்றதற்காகத் தூக்கு மேடைக்கு அனுப்பப்படுகிறோம் ஆனால் செம்மணியில் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்ட நூற்றுக்கணக்கான உடல்களை நான் உங்களுக்குக் காட்ட முடியும்” என்று கூறினார். செம்மணி புதைகுழி பற்றிய விவரங்கள் இப்படித்தான் வந்தன. குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட்டவுடன் நான் எனது வழக்கை முடித்தேன் அவர்கள் செம்மணி புதைகுழி குறித்து

ஒரு புதிய விசாரணையைத் தொடங்கினர். அந்த நேரத்தில், அவர்கள் சுமார் 15 எலும்புக்கூடுகளைத் தோண்டி எடுத்தனர்” என்று அவர் மேலும் நினைவு கூர்ந்தார்.

## பொறுப்புக்கூறல் மற்றும் முடிவிற்கு கொண்டு வருதலிற்கான ஓர் ஊக்கியாக அரசியல் விருப்பம்

2015ஆம் ஆண்டு நல்லாட்சியின் போது, நிலைமாறு கால நீதி மற்றும் தொடர்புடைய வழிமுறைகள் பற்றிய விவாதம் தொடங்கியது. நல்லாட்சி அரசாங்கத்தால் ஜெனீவா தீர்மானத்தின் பின்னர் காணாமல் போனோர் அலுவலகம் இழப்பீடுகளுக்கான அலுவலகம் மற்றும் உண்மை ஆணையம் ஆகியவை நிறுவப்பட்டன. ஆனால் அடுத்தடுத்த ஆட்சிகள் இந்தத் தீர்மானத்திற்கு இணைந்து அனுசரணை வழங்குவதிலிருந்து விலகி போரின் போது செய்யப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் அட்டூழியங்கள் குறித்து மறுக்கும் போக்கிலிருந்தன சில நாடுகளில் நடைமுறையில் உள்ள உலகளாவிய அதிகார வரம்பு பற்றி மஹிந்தரத்ன பேசினார். வரையறையின்படி குற்றம் எங்குச் செய்யப்பட்டது மற்றும் குற்றம் சாட்டப்பட்டவரின் தேசியம் அல்லது வசிப்பிடத்தைப் பொருட்படுத்தாமல் இனப்படுகொலை போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் போன்ற கடுமையான குற்றங்களுக்காகத் தனிநபர்கள் மீது வழக்குத் தொடர மாநிலங்கள் அல்லது சர்வதேச அமைப்புகளை அனுமதிக்கும் ஒரு சட்டக் கொள்கையாகும்.

“உதாரணமாக உள்நாட்டுப் போரின் போது சரணடைந்த பொலிஸாரைக் கொலை செய்தமைக்காக முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் மீது ஜேர்மனி வழக்குத் தொடர்ந்தது. இலங்கையில் இலங்கையர்களுக்கு எதிராகக் குற்றங்களைச் செய்த ஒரு இலங்கையரை உலகளாவிய அதிகார வரம்பின் அடிப்படையில் ஜேர்மனி வழக்குத் தொடர்ந்தது. எனவே, இது நிறுவப்பட்டுள்ளது. மேலும், நமக்கு உண்மையான மற்றும் நம்பகமான உள்நாட்டுச் செயல்முறைகள் தேவை. எல்லாவற்றிற்கும் மேலாக, இவை இலங்கை குடிமக்களுக்கு எதிரான இலங்கை குடிமக்களால் குற்றங்கள்” என்று அவர் மேலும் விளக்கினார்.

போரில் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போரினால் பாதிக்கப்பட்டவர்களின் துயரங்களிற்கு முடிவைக் காண்பதற்கு அரசியல் உறுதிப்பாடு சட்டங்களும் வழிமுறைகளும் மிகவும் நடைமுறையில் உள்ளன என்பதையும் அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார்.

காணாமல்போனோர் அலுவலக சட்டத்தை இணைந்து வரைவதில் தனது பங்களிப்பைக் குறிப்பிடுகையில், அது ஆணையர்களுக்கு விரிவான அதிகாரங்களை வழங்குவதாக அவர் கூறினார். சரியான அமைப்பு இருந்திருந்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவர்களால் சில பதில்களை வழங்க முடிந்திருக்கும். இராணுவம் அனைத்து ஆவணங்களையும் எவ்வாறு பராமரிக்கிறது என்பதை நான் கண்டிருக்கிறேன் எனவே இது என் பார்வையில் ஒரு கடினமான செயல்முறை அல்ல” என்று அவர் மேலும் கூறினார்.

காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் காணாமல்போனோர் அலுவலகம் நிச்சயமாகக் கண்டுபிடிக்க முடியும் என்று மஹிந்தரத்ன மேலும் கூறினார். இது வடக்கு மற்றும் கிழக்கு பற்றிய விஷயம் மட்டுமல்ல தெற்கைப் பற்றியும் என்ன? ஜே.வி.பி. கிளர்ச்சிகளின் போது காணாமல் போனவர்களைப் பற்றி என்ன? எனவே விடை கிடைக்காமல் பல குடும்பங்கள் உள்ளன ”என்று அவர் கூறினார்.

அவரது சொந்த வார்த்தைகளில் “நடந்ததை ஒப்புக்கொள்வது நிச்சயமாக நல்லிணக்க செயல்முறையை கொண்டு வருவதற்கான முதல் படியாகும்”. “நான் 2018இல் முன்மொழியப்பட்ட உண்மை ஆணையச் சட்டத்தை இணைந்து வரைவதில் ஈடுபட்டேன். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் அதில் பணியாற்றத் தொடங்கியது. உண்மை ஆணையத்தை அமைக்கும் நோக்கம் இருந்தது. ஆனால் இந்த விதிகள் நிறைவேற்றப்படுமா என்பது எங்களுக்குத் தெரியாது. ஆனால் ஒரு தொடக்கம் இருக்க வேண்டும். இந்தக் குற்றங்கள் நடக்கவில்லை என்று நீங்கள் மறுத்துச் சொல்லும் வரை நீங்கள் எப்படி நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்??” என்று அவர் மேலும் கேள்வி எழுப்பினார். அதே நேரத்தில், எங்கள் காலடியில் புதைகுழிகள் இருப்பதை அறிவது வெட்கக்கேடானது என்று கூறினார்.

இருப்பினும், அரசியல் விருப்பம் இருப்பதால் இந்த வழக்குகளில் சிலவற்றிற்கு பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதில் மஹிந்தரத்ன நம்பிக்கை கொண்டுள்ளார். அரசு இயந்திரத்தின் ஆதரவு இல்லாமல் இதைச் செய்ய முடியாது என்று அவர் கூறினார். “ஒவ்வொரு நிறுவனமும் என்னை ஆதரித்ததால் கிருஷாந்தி குமாரசாமியின் வழக்கை என்னால் வெற்றிகரமாக நடத்த முடிந்தது. அந்த நேரத்தில் ஊடகங்களும் எங்களுக்கு உதவியது. இந்த சம்பவம் நடந்தபோது கைதடியில் உள்ள மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். அரசாங்கத்தின் மீது அவநம்பிக்கை இருந்தது மேலும் இது மற்றொரு கேலிக்கூத்து செயல்முறையாக இருக்கும் என்று அவர்கள் நினைத்தனர். அனைத்து சாதாரண சாட்சிகளும் கைதடியில் இருந்தனர் அவர்கள் வர மறுத்துவிட்டனர். தமிழ் பத்திரிகைகள் எங்களை நேர்காணல் செய்தன மேலும் சாதாரண சாட்சிகள் கொழும்புக்கு வரத் தயங்குகிறார்கள் என்று நாங்கள் அவர்களிடம் கூறினோம்.

கொழும்பில் நீதிமன்றம் தயாராக உள்ளது நீதிபதிகள் சிங்களவர்கள் வழக்கறிஞர்கள் சிங்களவர்கள் சிஐடி மற்றும் மற்ற அனைவரும் சிங்களவர்கள் அவர்கள் வழக்கைத் தொடரத் தயாராக உள்ளனர் ஆனால் தமிழ் பொதுமக்கள் ஒத்துழைக்கவில்லையெனப் பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகள் தெரிவித்தன.” உடனடியாக சாட்சிகள் வர ஒப்புக்கொண்டனர். “அனைத்து சக்திகளும் ஒன்றிணைந்த ஒரு தருணம் அது” என்று அவர் மேலும் கூறினார்.

வழக்கின் போது அவர் எதிர்கொண்ட சவால்கள் குறித்து கேட்டபோது, பொதுமக்களிடமிருந்து வந்த எதிர்ப்பை அவர் நினைவு கூர்ந்தார். “இது ‘போர் வீரர்களை’ துன்புறுத்துவதற்கான முயற்சி என்று மக்கள் நினைத்ததால் எனக்குத் தொல்லை தரும் அழைப்புகள் வந்தன. ஆனால், அதைத் தவிர வழக்கைத் தீர்க்க பல்வேறு பிரிவுகளின் அழுத்தம் தவிர வேறு எந்த சவால்களும் இல்லை” என்று அவர் நினைவு கூர்ந்தார்.

ஒரு இளம் சட்டத்தரணியாக, மஹிந்தரத்ன குற்றவாளிகளைச் சிறையில் அடைக்கத் தீர்மானித்தார். இன்றுவரை குற்றத்தின் கொடூரத்தை அவர் பிரதிபலிக்கிறார். இருப்பினும், மோதல் தொடர்பான குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியதன் அவசியத்தை அவர் ஆதரிக்கிறார். “ஒரு நாகரிக சமூகம் பொறுப்புக்கூறலைக் கொண்டுவர முயற்சிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வழக்குகளை விசாரித்து, முடிந்தால், இந்த நபர்கள் உயிருடன் இருந்தால் அவர்களைக் கண்டுபிடிப்பதற்கும் அல்லது முடிந்தால் அவர்கள் இறந்திருந்தால் எச்சங்களைக் கண்டுபிடித்து குடும்பங்களுக்குத் தெரிவிப்பதற்கும் காணாமல்போனோர் அலுவலகம் நிறுவப்பட்டுள்ளது. ஒரு சில வழக்குகளைத் தவிர, ஒரு குடும்பத்திற்குக் கூட அவர்களின் உறவினர்கள் குறித்து தெரிவிக்கப்படவில்லை. ஆனால், மீதமுள்ளவற்றைப் பற்றி என்ன?” என்று அவர் முடிவில் கேள்வி எழுப்பினார். அரசின் பொறுப்புக்கூறல் செயல்முறையில் பொது விவாதத்தில் செல்வாக்கு செலுத்துவதில் ஊடகங்களின் பங்கை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

வொஷிங்டன்

## அமெரிக்காவை எதிர்த்தால்
# 10 சதவீதம் கூடுதல் வரி
### பிரிக்ஸ் நாடுகளுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை

அமெரிக்க எதிர்ப்பு கொள்கைகளை ஆதரிக்கும் நாடுகள் மீது 10 சதவீதம் கூடுதல் வரி விதிக்கப்படும் என பிரிக்ஸ் நாடுகளை ட்ரம்ப் எச்சரித்துள்ளார். இதனால் உலக நாடுகள் மத்தியில் பதற்றம் அதிகரித்துள்ளது என்றே கூறலாம்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், உலக நாடுகளுக்கு எதிராக அடிக்கடி நடவடிக்கை எடுத்து வருகிறார். வரி விதிப்பு, சட்டவிரோத வெளியேற்றம் உள்ளிட்ட பல்வேறு அதிரடி அறிவிப்புகளை அவர் வெளியிட்டார்.

இதனால் உலக நாடுகள் பெரும் பதற்றத்தை சந்திக்கின்றன. இந்த நிலையில் பிரிக்ஸ் கூட்டமைப்பு நாடுகளுக்கு டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப், பிரிக்ஸ் கூட்டமைப்பின் 'அமெரிக்கா விரோத' கொள்கைகளை ஆதரிக்கும் எந்த நாட்டையும் எதிர்த்து அமெரிக்காவின் இறக்குமதிப்பொருட்களுக்கு கூடுதல் 10 சதவீதம் வரி விதிக்கத் திட்டமிட்டுள்ளார்.



இந்நிலை குறித்து அவர் ட்ரூத் சோஷியல் பக்கத்தில் ஜூலை 6ஆம் திகதி நேரடியாக தெரிவித்தார்.

வரலாற்று போக்கில், பிரிக்ஸ் கூட்டமைப்பான தாய்லாந்து, ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகள் கடந்த 2009ஆம் ஆண்டு துவங்கியிருந்தாலும், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் ஈஜிப்து, எத்தியோப்பியா, ஐரோப்பிய ஐக்கிய அரபு, இலங்கை போன்ற நாடுகளும் இணைந்தன.

இந்நிறுவனத்தின் அண்மைய மாநாட்டில், அமெரிக்காவின் தன்மட்ட வரிவிதிப்புகளையும், ஈரானுக்கு எதிரான சைப்பட் தாக்குதல்களையும் பிரிக்ஸ் தலைவர்கள் கண்டித்தனர்.



## இன்று மூன்றாவது போட்டி:
# தொடரை கைப்பற்றப் போவது யார்?

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியானது பல்லேகலவில் இன்று செவ்வாய்க்கிழமை(08) பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.


மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இலங்கையும், இரண்டாவது போட்டியை பங்களாதேஷும் வென்ற நிலையில் தொடரைத் தீர்மானிக்கும் போட்டியாக இப்போட்டி அமையவுள்ளது.

இலங்கையணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் நிஷான் மதுஷ்க, பதும் நிஸங்க முதலிரண்டு போட்டிகளில் சோபிக்காத நிலையில், அவர்களிடமிருந்து சிறப்பான பெறுபேறுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. குறிப்பாக குழாமில் அவிஷ்க பெர்ணாண்டோ உள்ள நிலையில் நிஷான் மதுஷ்க பிரகாசிக்க வேண்டிய கட்டாயத்தை எதிர்கொள்கிறார். தவிர கமிந்து மெண்டிஸிடமிருந்தும் தாக்கம் செலுத்தக் கூடிய இனிங்ஸ் எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபக்கமாக பங்களாதேஷில் நஜ்முல் ஹொஸைன் ஷன்டோவை மொஹமட் நைம் பிரதியிடக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுவதோடு, அணித்தலைவர் மெஹிடி ஹஸன் மிராஸிடமிருந்தும் மேம்பட்ட துடுப்பாட்டப் பெறுபேறு எதிர்பார்க்கப்படும். இப்போட்டிக்கான அணியில் ஹஸன் மஹ்மூட்டை தஸ்கின் அஹ்மட் பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

லாகூர்

## அடுக்குமாடி குடியிருப்பு இடிந்து விபத்து
# 27 பேர் பலி



பாகிஸ்தானின் லாகூர், பாக்தாதி நகரில் 5 அடுக்குமாடிகளைக் கொண்ட குடியிருப்பு உள்ளது. இந்த அடுக்குமாடிக் குடியிருப்பு 40க்கும் மேற்பட்டோர் வசித்து வந்தனர்.

இந்நிலையில், இந்த அடுக்குமாடிக் குடியிருப்பு ஞாயிற்றுக்கிழமை (06) அதிகாலை இடிந்து விபத்துக்குள்ளானது. இதில் பலரும் இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டனர். இந்த சம்பவம் குறித்து அறிந்த மீட்புக்குழுவினர் விரைந்து வந்து இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். சிலர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

ஆனாலும், இந்த விபத்தில் கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கி 9 பெண்கள் உள்பட 27 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், இந்த விபத்தில் மேலும் சிலர் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளதாக அவர்களை மீட்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.



அமெரிக்கா

## எலான் மஸ்க் கட்சி:
# குழப்பத்தை அதிகரிக்கும்

அமெரிக்காவில் 3ஆவது கட்சியை ஆரம்பிப்பது அபத்தம் என உலகின் மிகப் பெரிய செல்வந்தரான எலான் மஸ்க் கட்சி ஆரம்பித்தமை குறித்து ஜனாதிபதி ட்ரம்ப் விமர்சனம் செய்துள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி ட்ரம்ப் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: அமெரிக்காவில் இரு கட்சி முறை தான் இருந்து வருகிறது. 3ஆவது கட்சியை தொடங்குவது குழப்பத்தை அதிகரிக்கும். மூன்றாவது கட்சியைத் தொடங்குவது அபத்தமானது.

குடியரசுக் கட்சியுடன் நாங்கள் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளோம். ஜனநாயகக் கட்சியினர் தங்கள் வழியைத் தவறவிட்டனர்.

ஆனால், அது எப்போதும் இரு கட்சி முறையாகவே இருந்து வருகிறது. மூன்றாம் கட்சிகள் ஒருபோதும் வேலை செய்யவில்லை. கட்சி தொடங்குவது எலான் மஸ்கிற்கு வேடிக்கையாக இருக்கலாம். ஆனால் அது அபத்தமானது என்று நான் நினைக்கிறேன். அமெரிக்காவில் அவர்கள் ஒருபோதும் வெற்றிபெறவில்லை என்ற உண்மை இருந்தபோதிலும், அவர் ஒரு மூன்றாவது அரசியல் கட்சியை ஆரம்பிக்க விரும்புகிறார்.

நம்பிக்கையையும், மனதையும் இழந்த தீவிர இடது ஜனநாயகக் கட்சியினருடன் நமக்கு அது போதுமானது. மறுபுறம், குடியரசுக் கட்சியினர் ஒரு சீராக இயங்கும் இயந்திரம், அவர்கள் நம் நாட்டின் வரலாற்றில் மிகப்பெரிய சட்டத்தை நிறைவேற்றினர். என அவர் கூறியுள்ளார்.



# இங்கிலாந்தை சுருட்டிய இந்தியா

இங்கிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டை இந்தியா வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இங்கிலாந்து வென்ற நிலையில், பேர்மிங்ஹாமில் புதன்கிழமை(02) ஆரம்பித்து ஞாயிற்றுக்கிழமை (06) முடிவுக்கு வந்த ஐந்தாம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் 3 விக்கெட்டுகளை இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இங்கிலாந்து, ஆகாஷ் டீப் (4), வொஷிங்டன் சுந்தர், பிரசீத் கிருஷ்ணா, இரவீந்திர ஜடேஜாவிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 271 ஓட்டங்களையே பெற்று 336 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ஜேமி ஸ்மித் 88, பிறைடன் கார்ஸ் 38, அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ் 33 ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக இந்திய அணித்தலைவர் ஷுப்மன் கில் தெரிவானார்.



# சிம்பாப்பேவுக்கு எதிராக முன்னிலையில் தென்னாபிரிக்கா

சிம்பாப்பேவுக்கு எதிராக இரண்டாவது டெஸ்டில் முன்னிலையில் தென்னாபிரிக்கா காணப்படுகிறது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் தென்னாபிரிக்கா வென்ற நிலையில், புலவாயோவில் ஞாயிற்றுக்கிழமை (06) ஆரம்பித்த இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட தென்னாபிரிக்கா, பதிலணித்தலைவர் வியான் முல்டரின் ஆட்டமிழக்காத 264, டேவிட் பெடிங்ஹாமின் 82, லுஹான்-ட்ரீ பிறிட்டோறியஸின் 78 ஓட்டங்களோடு முதல் நாள் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 465 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் முல்டருடன் டெவால்ட் பிறெவிஸ் ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். பந்துவீச்சில் தனக சிவங்கா 2, குன்டாய் மடிஜிமு, வெலிங்டன் மஸகட்ஸா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

## மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான தொடரை
# கைப்பற்றியது அவுஸ்திரேலியா



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்றிருந்த அவுஸ்திரேலியா, கிரெனடாவில் வியாழக்கிழமை (03) தொடங்கி ஞாயிற்றுக்கிழமை (06) முடிவுக்கு வந்த இரண்டாவது போட்டியை வென்றமையையடுத்தே இன்னுமொரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்தது.

நான்காம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் 7 விக்கெட்டுகளை இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த அவுஸ்திரேலியா, ஷாமர் ஜோசப் (2), அல்ஸாரி ஜோசப்பிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 243 ஓட்டங்களைப் பெற்றது. அலெக்ஸ் காரி 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தார்.

பதிலுக்கு 277 ஓட்டங்களை வெற்றியிலக்க்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், ஜொஷ் ஹேசில்வூட் (2), மிற்செல் ஸ்டார்க் (3), பியூ வெப்ஸ்டர், அணித்தலைவர் பற் கமின்ஸ், நேதன் லையனிடம் (3) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 143 ஓட்டங்களையே பெற்று 133 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அணித்தலைவர் றொஸ்டன் சேஸ் 34, ஷாமர் ஜோசப் 24 ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக காரி தெரிவானார்.

# பிரித்தானிய குரான் பிறீயை வென்ற நொரிஸ்

பிரித்தானிய குரான் பிறீயை மக்லரன் அணியின் லான்டோ நொரிஸ் வென்றுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை (06) அன்று நடைபெற்ற இப்பந்தயத்தை மூன்றாமிடத்திலிருந்து ஆரம்பித்தே இவ்வெற்றியை பிரித்தானியாவின் நொரிஸ் பெற்றதோடு, பந்தயத்தை இரண்டாமிடத்திலிருந்து ஆரம்பித்த நொரிஸின் சக மக்லரன் அணி ஓட்டுநர் ஒஸ்கார் பியாஸ்திரி இரண்டாமிடத்தைப் பெற்றதோடு, பந்தயத்தை 19ஆம் இடத்திலிருந்து ஆரம்பித்த சௌபர் அணியின் நிக்கோ ஹல்கன்பேர்க் மூன்றாமிடத்தைப் பெற்றார்.

இவ்வாண்டுக்கான போர்மியுலா வண் சம்பியன்ஷிப்புக்கான புள்ளிகள் பட்டியலில் 234 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் அவுஸ்திரேலியாவின் பியாஸ்திரி காணப்படுகின்றார்.

226 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நொரிஸும், 165 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நடப்புச் சம்பியனான மக்ஸ் வெர்ஸ்டப்பன் காணப்படுகின்றார்.



சிம்லா

# 10 மாத பெண் குழந்தை உயிர் பிழைத்த அதிசயம்

இமாசல பிரதேசத்தில் பருவமழை தொடங்கிய நிலையில், கடந்த சில நாட்களாக அங்குக் கன மழை பெய்து வருகிறது. அங்குள்ள சிம்லா, மண்டி உள்ளிட்ட பகுதிகள் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இந்தநிலையில் இமாசல பிரதேசத்தில் கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதில் 74 பேர் உயிரிழந்தனர். காணாமல் போன 37 பேரைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாக கூறப்படுகின்றது.

இந்தநிலையில், சிம்லாவில் வீட்டில் பெற்றோர் மற்றும் பாட்டியை வெள்ளத்துக்குப் பறிகொடுத்த 10 மாத குழந்தை அதிசயமாக உயிர் பிழைத்துள்ளது.

சிம்லாவை சேர்ந்தவர் ரமேஷ் (வயது 31). திருமணமான இவருக்கு ராதா (24) என்ற மனைவியும் நீதிகா என்ற 10 மாத குழந்தையும் உள்ளனர். தனது தாய் பூர்னாவுடன் (59) ஒரே வீட்டில் வசித்து வந்தனர். மழை வெள்ளத்தில் ரமேஷ், ராதா, பூர்னா ஆகியோர் அடித்துச் செல்லப்பட்ட நிலையில், அண்டை வீட்டாரின் உதவியால் அந்த பெண் குழந்தை மற்றும் பத்திரமாக மீட்கப்பட்டு உயிர் பிழைத்துள்ளது.

பொலிஸ் அதிகாரியான பல்வந்த் என்பவர் அந்த குழந்தையை தன் உயிரை பணயம் வைத்துக் காப்பாற்றியுள்ளார். அவருக்கு தற்போது பாராட்டுகள் குவிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 08, ஜூலை 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.